DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1410 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 14, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# கனடா எழுத்தாளர் 'வீணைமைந்தன்' நூல்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழக நூலக மண்டபத்தில் வெளியீடு

### கனடா 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கலந்து கொள்கின்றார்



கனடா மொன்றியால் வாழ் எழுத்தாளர் 'வீணைமைந்தன்' அவர்கள் எழுதிய மூன்று நூல்களான 'மண்ணும் மனசும்', "மறக்கத் தெரியாத மனசு", மற்றும் 'தமிழ்ச் சினிமாவில் மகாகவி பாரதியாரின் பாடல்கள்" ஆகியவற்றின் வெளியீட்டு விழா எதிர்வரும் 28-04-2023 அன்று வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் **நா. சண்முகலிங்கன்** அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. **சிறீ சற்குணராஜா** அவர்களும் சிறப்பு விருந்தினராக. கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் **ஆர். என். லோகேந்திரலிங்கம்** அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நூல்கள் பற்றிய விமர்சனங்கள் மற்றும் சிறப்புரைகள் ஆகியவற்றை ஆற்றுவதற்காக யாழ் மண்ணில் கல்வி மற்றும் கலை இலக்கிய துறைகளில் பங்காற்றி வரும் அறிஞர் பெருமக்கள் அழைக்கப்பெற்றுள்ளனர்.

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

# இலங்கையின் முதன்மைத் தமிழ்த் தேசிய நாளிதழ் 'வீரகேசரி'யின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்களுடனான

# ஒரு மாலைப்பொழுது



**Scarborough Event Centre (5637, Finch Avenue East, Scarborough)** ல் 16-04-2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 கனடிய தமிழ் அரசியல் தலைவர்கள். அமைப்புக்களின் பிரதிநிதிகள். ஊடகவியலாளர்கள் மற்றும் 'வீரகேசரி' அபிமானிகள் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கின்றார்கள். முற்பதிவு செய்தவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
416-732-1608, 416-270-4343, 647-409-8966

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
ROYAL LEPAGE ignite

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI



Joyeux Puthandu !

Happy Puthandu !

VILLE DE CITY OF DOLLARD-DES-ORMEAUX

பெருந்தன்மையுடன் நிதியாதாரம் அளிப்பவர்கள்

alectra

CN

## ப்ராம்ப்ட்டன் பூங்காக்களை தூய்மை செய்தல்

ஏப்ரல் 1 முதல் நவம்பர் 1 வரை

ப்ராம்ப்ட்டன் நகரை தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்திருக்க உதவுங்கள். பல பூங்காக்களில் ஒன்றில், சமுதாய உந்துதல் அல்லது சுய உந்துதலின்பேரிலான தூய்மைப்பணிக்கு பதிவு செய்யுங்கள்

**பூங்காக்களை தூய்மை செய்தல் மற்றும் பிபிக்யூ (BBQ)**

**ஏப்ரல் 15** நைட்ஸ்ப்ரிட்ஜ் (Knightsbridge) பூங்கா இக்கோசோர்ஸ் (Ecosource) இனால் உபசரிக்கப்படும்
**ஏப்ரல் 22** லோஃபர்ஸ் லேக் (Loafer's Lake)-டோரோன்ட்டோ மற்றும் பிராந்திய காப்பக ஆணையத்தினால் உபசரிக்கப்படும்
**ஏப்ரல் 29** கிவானீஸ் பூங்கா (Kiwanis Park)-ப்ராம்ப்ட்டன் நகர பூங்காக்களுக்கான துறையினால் உபசரிக்கப்படும்
**மே 6** ஃப்ரெட் க்ளைன் பூங்கா (Fred Kline Park) கிரெடிட் வேல்லி (Credit Valley) காப்பகத்தினால் உபசரிக்கப்படும்
**மே 7** ரெட் டாப் வேல்லி/கொமகாட்டா மாரு பூங்கா (Red Top Valley/Komagata Maru Park )-ப்ராம்ப்ட்டன் நகர பூங்காக்களுக்கான துறையினால் உபசரிக்கப்படும்
**ஜூன் 3** ஃபக்கன் பூங்கா (Fuggan Park) ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம், நைட்ஸ் ஆஃப் கொலம்பஸ் (Knights of Columbus) மற்றும் லெட்ஸ் கெட் டுகெதர் (Let's get Together) இனால் உபசரிக்கப்படும்(மின்னணு கழிவு அப்புறப்படுத்தல் நிகழ்வு)

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தன்னார்வத் தொண்டுக்கான நேரம் ஒதுக்கப்படும்

தூய்மைப்படுத்தல் நிகழ்வுகளுக்கான பட்டியலைப் பெறுவதற்கும் பதிவு செய்வதற்கும் வருகை தருக: **brampton.ca/cleanup**

தூய்மைப்பணி கூட்டு நிறுவனங்கள்

Credit Valley Conservation inspired by nature

ecosource Growing a Green Community

Toronto and Region Conservation Authority

311 brampton.ca/cleanup

BRAMPTON





# Nick Mantas

Councillor

Ward 22, Scarborough-Agincourt

100 Queen Street West, Suite A1
Toronto, ON M5H 2N2
Phone: (416) 392-1374
Fax: (416) 392-7431
Nick.Mantas@toronto.ca

PUTHANDU
Vazthukal
-14 APRIL-



We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# மாங்கனித் தீவை ‘சீவித்தள்ளும்’ சீரற்ற தலைமைகள்

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

மாங்காய் வடிவான இலங்கை என்னும் வளங்கள் நிறைந்த ‘குட்டித் தேசத்தை’ ‘பிடி பந்தயம். குட்டிச்சுவராக்கிவிடுகின்றேன் விரைவில்’ என்ற பாணியில் தற்போதைய ஜனாதிபதி ரணில் ஆட்சியை நகர்த்திச் செல்வதாகவே தெரிகின்றது.

மக்கள் ஆதரவு இல்லாத ஒருவர் எவ்வாறு நாட்டின் தலைவரானார் என்பதைப் பற்றி மக்கள் சிந்தித்து முடிவெடுக்க அவகாசம் வழங்கப்படாமலே. அவரது உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு சகாக்கள் அவரை ‘சனாதிபதி’ ஆக்கிவிட்டார்கள்.அவரோ நாட்டை நாசமாக்கும் நோக்கோடு பயணிக்கின்றார் என்பது நன்கு புலனாகியுள்ளது.

மாங்காய் ஒன்றின் தோலைச் சீவி பின்னர் சதையை சீவி குழந்தைகளும் பெரியவர்களும் சுவைத்து மகிழ்வது தான் எமது வழக்கம். ஆனால் இலங்கை என்னும் மாம்பழத்தை கத்தி கொண்டு சீவித் தள்ளும் வேலையைத் தான் தற்போதைய ரணில் மற்றும் அமைச்சர்கள் கூட்டாகச் செய்து வருகின்றார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை சமாளிக்க முடியாமல் கடன் வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்று பின்னர் அதனைச் சமாளிக்க நிலம் என்னும் சொந்த மண்ணை வேற்று நாட்டவனுக்கு சீவிக் கொடுப்பது என்பது எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதே உண்மை.

ரணில் என்பவரின் ஆட்சியில் அனைத்து தளங்களிலும் முறையற்ற நிர்வாகமே இடம்பெற்று வருகின்ற என்பதும். தொடர்ந்து ரணிலும் அவரது அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்களும் தங்கள் சுகபோகங்களை அனுபவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளார்கள் என்பது தெளிவா-கத் தெரிகின்றது.

முக்கியமாக தமிழர் பிரதேசங்களில் உள்ள நில வளங்கள் சூறையாடப்படுவது தெளிவாகத் தெரிகின்றது.

கிளிநொச்சி இரணைமடு குளத்துக்கு தெற்குப் புறமாக 500 ஏக்கர் மற்றும் இயக்கச்சியை அண்மித்த பகுதியில் 200 ஏக்கர் காணியும் சீனாவுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளமை தெரிய வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், கிட்டத்தட்ட 500 ஏக்கர் காணி-களை தனது கடன்களை சீர்செய்வதற்கு இரணைமடுவிற்கு தெற்குப் புறமாக சீனாவிற்கு வழங்குவதற்கான முழு முயற்சியையும் இலங்கை அரசு எடுத்திருப்பதாக அறிகின்றேன்.

இரணைமடுவின் தெற்கு புறமாகவும், யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் எல்லையாக உள்ள இயக்கச்சி பகுதியில் மண்டலாய் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இருக்கின்ற கிட்டத்தட்ட 200 ஏக்கருக்கு அதிக காணியையும் சீன நாட்டுக்கு வழங்குவதற்காக அவர்கள் சில திட்டங்களை முன்னெடுத்திருப்பது அவர்களின் செயற்பாடுகளிலும், நடவடிக்கைகளிலும் தெரியவந்துள்ளது.

இலங்கையில் பல நிலப்பகுதிகள் இவ்வாறு நாடுகளிற்கு விற்கப்படுகின்றன. அதில் கூடுதலாக கடலை தரையாக்கி சீனாவிற்கு விற்றல், கடலோரங்கள் மற்றம் தரைகளை சீனாவிற்கு விற்கும் செயற்பாடுகளில் அரசு இறங்கியுள்ளது. இந்தியாவிற்கு தான் நல்லபிள்ளை போன்று நடித்துக்கொண்டாலும், தன்னுடைய வேலைத்திட்டங்களை சீனாவை வைத்தே கையாளுகின்ற பெரும் யுத்திகளை இலங்கை அரசு கையாளுகின்றது.

இது பிராந்திய வல்லரசு என்ற அடிப்படையிலும், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஈழத்தமிழர்களின் இருப்பு என்பதும் பெரிய அளவிலே பாதிப்புக்குள்ளாகும் நிலை இருக்கின்றது.

இரணைமடுகுளத்தின் தெற்கு பகுதியில் 500 எக்கர் காணிகளை சீனாவுக்கு வழங்குவதும், இயக்கச்சி பகுதியை அண்மித்து 200 ஏக்கர் காணியை சீன அரசுக்கு வழங்கு வதற்கு இலங்கை அரசு எடுத்திருக் கின்ற முயற்சி மிகவும் அபாயகரமானது.

கிடைத்திருக்கின்ற தகவலின் அடிப்படையில் இரணைமடுவின் தெற்கு பகுதிக்கு மகாவலி திட்டத்தை கொண்டு வருதல், சிங்கள குடியேற்றங்களை கொண்டுவருதல் என்ற போர்வையில் பாரிய வேலைத்திட்டங்களிற்காகவும், நீண்டகால அடிப்படையில் தமிழ் மக்களுடைய இனத் தனித்துவத்தை இல்லாது செய்து ஓர் சிங்கள மயப்படுத்துலாது செயற்பாடுகளில் அவர்கள் முன்னின்று உழைக்கின்றார்கள் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரின் அடுத்த நடவடிக்கை என்னவென்பது தெரியவில்லை.

# மன்னாரில் மீட்கப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி 16 மில்லியன் ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது



மன்னார்- இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பிரதேச ஊழல் ஒழிப்புப் பிரிவினருடன் இணைந்து மன்னார் சிலாவத்துறை பகுதியில் நேற்று வியாழக்கிழமை (13) அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது 1 லட்சத்து 11 ஆயிரம் போதை மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி 16 மில்லியன் ரூபா என தெரிய வந்துள்ளது.

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கடல் வழியாக கொண்டு வந்து குறித்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.குறித்த கடத்தல் பொருட்கள் யாவும் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பிரதேச ஊழல் ஒழிப்பு போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கடத்தல் பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்ட்டதுடன் இந்த நடவடிக்கையில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் ஏ9 வீதியில் இருந்து 1.6 கிலோமீற்றர் தூரத்தில் புத்தூர் - மீசாலை AB 32 வீதியில் 19.5 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 778 883-9894 / 604-767-9549
மின்னஞ்சல் - kirupakarankathiravelu@gmail.com

HELP WANTED

Immediately we need an experienced line cook and dishwasher for a Mediterranean restaurant in Toronto Beaches area.
Fully time/ Part time day and evening shifts available.
Please call
647-783-3112 or
416-913-3361

இலங்கை வத்தளை நகரத்தில் காணி விற்பனைக்கு உண்டு

இலங்கையில் கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் செல்லும் வழியில் உள்ள வத்தளைச் சந்திக்கு அருகாமையில் உள்ள 45 பேர்ச்சஸ் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. காணியை முழுதாகவோ அன்றி பகுதியாய்ப் பிரித்தோ வாங்கலாம். விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
(416) 839-7064
என்னும் இலக்கத்தை அழைக்கவும்

கனடிய செய்திகள் Canadian News

# திருக்குறளின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி. யு. போப் அவர்களுக்கான நினைவுச் சின்னம் கனடாவில் நிறுவப்படும்

திருக்குறள் நூலில் அடங்கியுள்ள அனைத்துக் குறள்களையும் வாசித்து தெளிந்து அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த கனடியரான ஜி. யு. போப் அவர்களைக் கௌரவித்து நினைவு கூரும் வகையில் கனடிய தமிழர் பேரவை முன்னெடுக்கும் நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் விரைவில் பூர்த்தியடையும் என்ற நம்பிக்கை தற்போது அனைவரிடத்திலும் பரவியுள்ளது.





இந்த வகையில் தமிழ் அறிஞரான ஜி.யு.போப் அவர்களுக்கு, கனடாவின் பிறின்ஸ் எட்வேர்ட் தீவில் அமைந்துள்ள பெடெக் என்ற அவர் பிறந்த கிராமத்தில், நினைவுச்சின்னம் ஒன்றினை அமைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிக்கு பலமும் நிதியும் சேகரிக்கும் வகையில்






இசை நிகழ்ச்சி. இசை நிகழ்ச்சி ஒன்று கனடாவில் நடைபெறவுள்ளது.

"அன்புடன் தமிழ் என்ற அழகிய பெயருடன் எதிர்வரும் May 06-2023" Mega Tune & Agni இசை நிகழ்வுக்கு கனடியத் தமிழர் பேரவை Canadian Tamil Congress (CTC) ஒன்றினை நடத்துவது தொடர்பான அறிவிப்பை கனடிய தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றுக்கு விடுக்கும் வகையில்ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் அண்மையில் மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

தமிழ் மொழி விரிவுரையாளர்களான பொன்னையா விவேகானந்தன் மற்றும் திருமதி. ஸ்ரீதாஸ் ஆகியோர் பயனுள்ள உரைகளை ஆற்றினார்கள்.

கனடிய தமிழர் பேரவையின் தலைவர் திரு. சிவன் இளங்கோ நிகழ்விற்கு தலைமை தாங்கினார். அத்துடன் கனடாவின் மெகா ரியுனர்ஸ் இசைக்குழுவின் தலைவர் ம. அரவிந்தன் மற்றும் "அக்னி" இசைக்குழுவின் நிறுவனர் திருமதி. சில்வியா பிரான்சிஸ் ஆகியோரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டு இசை நிகழ்ச்சிக்கு கனடா வாழ் தமிழ் மக்கள் தங்கள் ஆதரவைத் தரவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தனர்.

**செய்தியும் படங்களும்: சத்தியன்**


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்கவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று மக்களை முட்டாள்கள் ஆக்க முனையும் இலங்கையின் நீதி அமைச்சர்



**- மன்னார் நிருபர்**

நாட்டின் ஜனநாயகத்தை மேலும் பாதுகாக்கவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இனம், மதம், கட்சி, வேறுபாடுகள் இருக்கும் வரை நாம் வளர்ந்த நாடாக மாற முடியாது. தற்போதைய ஜனாதிபதியின் தலைமையில் 8 மாதங்களுக்குள் பொருளாதார ஆய்வாளர்களும் மக்களும் எதிர்பார்க்காத வகையில் நாட்டை கட்டியெழுப்ப முடிந்தது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னார் சிலாவத்துறை கொண்டச்சி சிங்கள விஜய கம்மான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்த பின்னர் செவ்வாய்க்கிழமை (11) காலை நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்‘ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீதி அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்த நீர் சுத்திகரிப்பு திட்டத்தினால் கொண்டச்சி, காயக்குழி, மறிச்சுக்கட்டி மற்றும் கல்லாறு ஆகிய பகுதிகளில் வசிக்கும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்கள் பயனடைவார்கள்.

மக்களுக்கு குடிநீர் வசதி உள்ளது. சிலாவத்துறை, வில்பத்து, விஜயதிலக வடக்கு மற்றும் வடமத்திய மாகாண பிரதம நீதியரசர் சங்கநாயக்க, மகாவிளச்சி அதி வணக்கத்துக்குரிய விமலநாயக்க தேரர், நீதியமைச்சர் விடுத்த கோரிக்கைக்கு அமைய, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, இதற்காக ரூ.34 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் பல நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வின்படி, இங்குள்ள நீர் சுத்திகரிப்புக்கு, பிறகு குடிப்பதற்கு ஏற்றது என பரிந்துரைக்கப்பட்டு அதன்படி இந்த நீர் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு சிங்களக் கிராமம் சிங்கள விஜய கம்மான என்பதுடன் கிராமத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தேசிய மற்றும் மத ஒற்றுமைக்கு முன்னுரிமை வழங்கி இங்கு வாழ்கின்றனர்.

பொறுப்பான தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படாத குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள் நாட்டில் இன்னும் பல இருப்பதாகவும், அந்த மக்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருவது அரசாங்கத்தின் பொறுப்பு. சிங்களத் தமிழர் மற்றும் கிராமத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு முன்னுரிமை வழங்கி பாராட்டப்பட வேண்டும்.

கட்சிகள், நிறங்கள், மதங்கள், சின்னங்கள் என தற்போது உள்ள பிளவுகளால் மக்கள் மத்தியில் பிளவுகள் நிலவும் வரையில் அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவது இலகுவான காரியம் இல்லை.

பாதுகாப்பான மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கடுமையான சட்ட நிபந்தனைகளைக் கொண்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி பயங்கரவாதத் தடைச் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டதாகவும் அதற்கு எதிராக சிலர் செயற்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த 4 ஆண்டுகளில் ஈஸ்டர் தாக்குதல், தொற்று நோய், நிலைமைகள் மற்றும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தற்போதைய ஜனாதிபதியின் தலைமையில், எட்டு மாத குறுகிய காலத்தில், நாடு அனைத்து வழிகளிலும் முன்னேறியுள்ளது. பொருளாதார ஆய்வாளர்கள் மற்றும் மக்கள் எதிர்பார்த்ததை விடவும் உள்ளது என்றும் அமைச்சர் நினைவூட்டினார்

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வகையில் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவே ஒவ்வொருவரும் ஏனைய இனங்களையும் மதங்களையும் மதிக்க வேண்டும் எனவும் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் நீதி அமைச்சரின் தனிப்பட்ட நன்கொடையுடன் சிஹல விஜயகம பிரதேசத்தில் வசிக்கும் 55 சிங்கள, தமிழ், முஸ்லிம் குடும்பங்களுக்கான உலர் உணவு வழங்கப்பட்டதுடன், கொண்டச்சி கிராம சேவையாளர் பிரிவில் 24 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அநுராத ஜயரத்ன, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் தலைவர் ஜே.ஜே. ரத்னசிறி, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல், முசலி பிரதேசச் செயலாளர் உள்ளடங்களாக அரச அதிகாரிகள், பிரதேச சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.





MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

உலக செய்திகள் World News

# பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தினால் அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தின் நிதியனுசரனையில் ப்ரண்லி சிப் பௌன்டேசன் மற்றும் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் இணைந்து 100 வறிய மாணவர்களுக்கு அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு உடபுஸல்லாவ முத்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது பிரதம அதிதியாக ப்ரண்லி சிப் பௌன்டேசன் இன் உப தலைவர் கிரிசாந்தன் அவர்களும் செயலாளர் ஆரிபா அவர்களும், நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் இன் தலைவர் வினோஜ்குமார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன் போது மாணவர்களுக்கு புதிய கற்றல் முறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும் நடாத்தப்பட்டது சிறப்பம்சமாகும்.

பிளேலோமவுண்ட் தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 56 மாணவர்களுக்கும், ரப்பானொக் தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 18 மாணவர்களுக்கும், சூரியகாபத்தன தமிழ் வித்தியாலயத்தில் உள்ள 26 மாணவர்களுக்கும் மொத்தமாக ரூபா 3 இலட்சம் பெறுமதியான 100 மாணவர்களுக்கு அத்தியாவசிய கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மக்களுக்கு யோகக் கலையின் உண்மைகளை உணர்த்த சைவ முன்னேற்றச் சங்கத்தின் மற்றுமொரு சேவையே "அறிவொளி வளையம்" என்பது குறிப்பிடத்தக்கது. அறிவொளி வளையத்தினால் இலங்கையில் பல இடங்களில் சேவைகளைச் செய்து வருகின்றைமை குறிப்பிடத்தக்கது.



# ஆளுநர் அரசியல்சட்டத்துக்கு விசுவாசமாக இருக்கவேண்டும்: அரசியல்கட்சிக்கு அல்ல.. முதல்வர் மு.க.ஸ்டாலின்



ஆளுநர் அரசியல் சட்டத்துக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவையில் ஆளுநருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். அப்போது அவர், "சட்டப்பேரவையில் இரண்டாவது முறையாக ஆளுநர் பற்றி தீர்மானம் கொண்டு வரும் விரும்பத்தகாத நிகழ்வு நடைபெறுவது வருத்தமளிக்கிறது.

ஆளுநர் என்ற நிலையைத் தாண்டி அரசியல்வாதியாக பேசுகிறார். பிரதமர் தமிழ்நாட்டிற்கு வரும்போதோ, அல்லது நான் பிரதமரை சந்திக்க டெல்லிக்கு செல்லும்போதோ சர்ச்சைக்குரிய வகையில் பேசுவதை ஆளுநர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். ஆளுநர் என்பவர் பற்றற்ற அடையாளம் உள்ளவராக இருக்க வேண்டும் என சர்க்காரியா குழு பரிந்துரைத்துள்ளது. நாள்தோறும் ஒரு கூட்டம். நாள்தோறும் ஒரு விமர்சனம் என ராஜ்பவனை அரசியல் பவனமாக மாற்றி வருகிறார். ஆட்டுக்கு தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவை இல்லை என அண்ணா கூறியுள்ளார். அனுமந்தையா நிர்வாக சீர்திருத்த ஆணையம், கட்சி, ஒருதலை சார்பு தன்மை இன்றி ஆளுநர் செயல்பட வேண்டும் என தெரிவித்திருந்தது. ஆளுநரை நீக்கும் அதிகாரம் சட்டமன்றதுக்கு இருக்க வேண்டும் என்கிற கருத்து தெரிவிக்கபட்டு கருத்து கேட்பு நடத்தப்பட்டது. ஆளுநர் அரசியல் சட்டதுக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமே தவிர அரசியல் கட்சிக்கு அல்ல என வி.பி. சிங் குறிப்பிட்டுள்ளார். ஆளுநர் தமிழக அரசுக்கும் மக்களுக்கும் நண்பராக இருக்க தயாராக இல்லை. ஆளுநர் வரையறுத்த தகுதிகளை மீறி செயல்படுகிறார். ஆளுநரின் அரசியல் விசுவாசம் அரசியல் அமைப்பு சட்டத்தை விழுங்கி விட்டது. மதசார்பின்மைக்கு எதிராக பேசுகிறார்" என்று தெரிவித்தார்.





# இலங்கையில் "யானை" விலைக்கு விற்கப்படும் இளநீர்: மக்கள் விசனம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

(13-04-2023)

இலங்கையில் இளநீர் விலை நம்ப முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் அதிகரித்து வரும் கடும் வெப்பநிலை காரணமாக, தாகத்தை தீர்ப்பதற்கு மக்கள் பல்வேறு வகையான பானங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

அந்த வரிசையில் தற்போது மக்கள் இளநீரை தேடி செல்லும் நிலையில், அதன் விலை நம்ப முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் 80 ரூபாய் முதல் 90 ரூபாய் வரை விற்கப்பட்ட இளநீர் விலை தற்போது 200 ரூபாவை தாண்டியுள்ளது.

மேலும் ஒரு இளநீர் வெளிநாட்டவருக்கு 300 ரூபாய்க்கு விற்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# கனடா Toronto Voice Of Humanity அமைப்பின் அனுசரனையில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பில் நடைபெற்றது




கனடாவில் கடந்த பல வருடங்களாக சேவை நோக்குடன் இயங்கிவரும் Toronto Voice Of Humanity அமைப்பின் அனுசரனையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் உள்ள இரத்த பற்றாக்குறையை போக்கும் நோக்கொடு இரத்த தானம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (08) மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு கணிஷ்ட வித்யாலயத்தில் நடைபெற்றது.

சக்தி மற்றும் காந்தி விளையாட்டு கழகங்கள் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன் பின்பு இரத்தம் வழங்கும் நிகழ்வு ஒவ்வொரு 6 மாத கால இடைவெளியில் நடாத்தவள்ளதாக பாடசாலையின் பழைய மாணவர்கள் தெரிவித்தனர். வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்தியர் மற்றும் தாதியர்கள் இரத்த மாதிரிகளைச் சேகரித்தனர்.

மற்றும் 50க்கு மேற்பட்ட நன்கொடையாளர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களுக்கான சான்றிதழ்களும் அமைப்பினூடாக வழங்கி வைக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களிலும் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் இவ்வாறான மக்கள் நலன் சார்ந்த பணிகளுக்கு புலம் பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் உள்ள அமைப்புக்களின் ஆதரவு தேவை என்பதும் இந்த நிகழ்வின் மூலலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.






# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பத்து மில்லியன், இலங்கை ரூபாய்கள் பெறுமதியான மருந்துகள் கனடியத் தமிழர்களின் நன்கொடை!



கனடியத் தமிழர்கள் பத்து மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான உயிர் காக்கும் மருந்துப் பொருட்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர். கடந்த ஆண்டு கனடியத் தமிழர் பேரவையினால் (Canadian Tamil Congress - CTC) ஒழுங்கு செய்யப்பட்ட நிதிசேர் நடையூடாக திரட்டப்பட்ட நிதியின் இரண்டாவது நன்கொடை இதுவாகும், கடந்த ஆண்டு முதலாவது நன்கொடைத் தொகுதி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையிடம் கையளிக்கப்பட்டது. கனடியத் தமிழர் பேரவை தமது வருடாந்த நிதிசேர் நடையூடாக வருடந்தோறும் பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகின்றது.

இலங்கையின் மோசமான பொருளாதாரச் சரிவால் உயிர் காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர்கொண்டு வருகின்றன. இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு கனடியத் தமிழர் பேரவையினரால் பதினான்காவது வருடாந்த தமிழ்க் கனடிய நிதிசேர் நடைப ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் திரட்டப்படும் நன்கொடை மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மத்தி மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் வழங்குவதெனத் திட்டமிடப்பட்டது.

இந்த நன்கொடையின் இரண்டாம் கட்டமாக கனடியத் தமிழர் பேரவையினால் ஒழுங்கமைக்கப்பட்ட இரண்டாம் தொகுதி மருந்துப் பொருட்கள் இன்று ஏப்ரல் 12 புதன்கிழமை 2:30 மணிக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இயக்குனர் மருத்துவர் கலாரஞ்சனி கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த மருந்து பொறுப்பேற்றல் நிகழ்வில் கனடியத் தமிழர் பேரவையின் பிரதிநிதி மற்றும் மனிதாபிமான திட்டங்களின் இணைப்பாளர் இதுரைரத்தினம் துசியந்தன், புற்றுநோய் நிபுணர் மருத்துவர் A இக்பால், நோயியல் நிபுணர் மருத்துவர் அகிலன் சின்னத்துரை மற்றும் பல மருத்துவ நிபுணர்கள், மருத்துவமனை நிர்வாக பொறுப்பதிகாரிகள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வினைச் சிறப்பித்தார்கள்.

எதிர்வரும் மாதங்களில் ஏனைய மருத்துவமனைகளுக்குமான நன்கெடைகள் திட்டமிட்டபடி கனடிய தமிழர் பேரவையினால் ஒழுங்கமைக்கப்பட்டு கையளிக்கப்படும்.






# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு திருப்பலி!

இலங்கை செய்திகள்
Sri Lanka News







**- மன்னார் நிருபர்**

உயிர்த்த ஞாயிறு திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் சனிக்கிழமை (08) இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கல் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்லியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலி இடம் பெற்ற போது ஆலயத்தை சூழ இராணுவம் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தது.

மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி இடம் பெற்றதோடு, தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை (10) காலையும் திருவிழா திருப்பலி ஆலயங்களில் ஒப்புக் கொடுக்கப்பட்ட அமையும் குறிப்பிடத்தக்கது.

# 19 வருட இழுத்தடிப்பிற்கு முற்றுப்புள்ளி — பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வீடுகள்

2004 ஆம் ஆண்டு சுனாமி அணர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மருதமுனை மக்களுக்காக கட்டப்பட்ட மேட்டு வட்டை 65 M வீட்டுத்திட்டம் இதுவரை பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்திருந்தது.

குறித்த வீட்டுத் திட்டத்திற்குரிய பயனாளிகள் தெரிவு செய்யப்படுவதில் தொடர்ந்தும் ஏற்பட்ட இழுபறி நிலை காரணமாகவே இந்த வீடுகள் வழங்கப்படாமல் இருந்து வந்தது.

பல அரசியல் பிரமுகர்களும்இ அதிகாரிகளும் இந்த வீட்டுத் திட்டத்தை பார்வையிட்டு அதனை விரைவில் வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இன்றுவரை அவர்களால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனது.

குறித்த விட்டுத் திட்ட வீடுகள் உரிய மக்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததனால் அந்த வீடுகள் சேதமடைந்து உடைந்து களவாடப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையிலேயே காணப்பட்டது.இந்நிலையில் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஜனாதிபதியினால் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த வகையில் கல்முனை பிரதேச அபிவிருத்திக் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது மருதமுனையை சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் மருதமுனை மேட்டுவட்டை 65 மீற்றர் வீட்டுத் திட்டம் தொடரில் கேள்வி எழுப்பியதுடன் எப்போது இந்த வீடுகள் மக்களுக்கு கையளிக்கப்படும் என்ற கேள்வியையும் கேட்டிருந்தார்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் விளக்கம் அளிக்கும்போது இந்த வீட்டுத் திட்டம் இதுவரை மக்களுக்கு வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய விடயம். இனியும் இதனை இழுத்தடிக்காமல் உரிய பயனாளிகளை தேர்வு செய்து அந்த வீடுகளை



வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுயளித்தார்.

எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் இந்த வீட்டுத் தொகுதி மக்களிடம் கையளிக்கப்படும். இதற்காக கல்முனை பிரதேச செயலாளர் உரிய நடவடிக்கைகளை எடுத்து உரிய பயனாளிகளை தெரிவு செய்யும் பட்டியலை பூரணப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.



கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக குறித்த வீட்டு திட்டத்தை மக்களுக்கு கையளிப்பதற்காக மருதமுனைக்கு அண்மையில் விஜயம் செய்த எஸ்.எம்.எம். முஷாரப் MP 65 மீற்றர் வீட்டுத் திட்டத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் மாவட்ட அரசாங்க அதிபருடனும் தொலைபேசியில் தொடர்பு நிலைமைகளை விளக்கினார்.

இதற்கமைவாக ஏப்ரல் பத்தாம் திகதி இந்த வீடுகளை கையளிப்பதற்கான செயற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரபுடன் இணைந்து கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் இந்த வீட்டுத் திட்டத்தின் ஒரு தொகுதி வீடுகள் இன்று மக்களிடம் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற விடுகள் கையளிக்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் விடுகளையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குறித்த வீட்டுத் திட்டத்தை மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையிலும் ஒழுங்குபடுத்துவதிலும் முழுமையாக செயற்பட்ட கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ், பாராளுமன்ற உறுப்பினரின் கல்முனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் பீ.எம்.எம்.ஜ ஃபர் ஆகியோருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

# அச்சுவேலியில் போராட்டக் காரர்கள் — போலீசார் முறுகல் நிலை!

(11-04-2023)

அச்சுவேலியில் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் வீதியோரத்தில் பந்தல் அமைத்து தொடர்ந்து போராட தயாரான போது அதற்கு அச்சுவேலி பொலிஸார் அனுமதி மறுத்தமையால் அங்கு குழப்ப நிலை தோன்றியது.



இந்நிலையில் தனியார் காணிக்குள் பந்தல் அமைத்து போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

அரசுக்கு சொந்தமான அச்சுவேலி நெசவு சாலையை அத்துமீறி கைப்பற்றி அடாவடித்தனம் புரியும் மதப் பிரிவினரை வெளியேற்றுமாறு கோரி போராட்டம் இடம்பெற்று வருகிறது.



அச்சுவேலி நெசவு சாலை முன்றலில் செவ்வாய்க்கிழமை (11) காலை 8 மணியளவில் சிவசேனா அமைப்பின் ஏற்பாட்டில் இப் போராட்டம் ஆரம்பித்து இடம்பெற்று வருகிறது.

இதன்போது போராட்டகாரர்கள் பந்தல் அமைத்து போராட்டத்தில் ஈடுபட முற்பட்டபோது அங்கு வருகை தந்த அச்சுவேலி பொலிஸார் அவ்வாறு செய்ய முடியாதென தெரிவித்ததுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் விவரங்களை சேகரித்தனர்.

இந்நிலையில் தனியார் காணிக்குள் பந்தல் அமைத்து போராட்டத்தை தொடர்ந்து போராட்டகாரர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஊடக ஆளுமை இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் BBC மாணிக்கவாசகம் இயற்கை எய்தினார்

இலங்கையின் தமிழ் ஊடக ஆளுமைகளில் ஒருவரும். இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் ரொய்ட்டர்ஸ், BBC, வீரகேசர ஆகிய நிறுவனங்களின் ஊடகவியலாளருமான பொன்னையா மாணிக்கவாசகம் 77வது வயதில் புதன்கிழமை (12) அதிகாலை வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற வவுனியா தெற்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் வைத்தியகலாநிதி வித்திராவின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா வைரவ புளியங்குளம் 10 ஆம் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை 13.04.2023 அன்று 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து 9 மணிக்கு தட்சனாங் குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



கனடிய செய்திகள் Canadian News

# கனடா வாழ் புங்குடுதீவு அன்பர்கள் ஒன்றாகக் கூடி அனுஸ்டித்த மறைந்த எழுத்தாளர் மு. தளையசிங்கம் அவர்கள் மறைந்த 50வது ஆண்டு தினம்







இலங்கையின் வடபுலத்தின் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சமூக அக்கறை கொண்ட ஒரு எழுத்தாளனாக தன்னை அடையாளப்படுத்தியும் குறிப்பாக சாதீயத்திற்கு எதிராக எழுதியும் பேசியும் வாழ்ந்து மடிந்த மு. தளையசிங்கம் அவர்கள் மறைந்த 50வது ஆண்டு தினம் கனடாவில் கடந்த 09-04-2023 அன்று அனுஸ்டிக்கப்பெற்றது.

மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில். நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு அமரருக்கு தங்கள் அஞ்சலியைத் தெரிவித்தனர்.



எழுத்தாளர் தாம் சிவதாசன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சிலரும் கலை இலக்கியவாதிகளும் உரையாற்றினார்கள்.

அவர்களில் பலரது உரைகள் மிகவும் தரமானதாகவும் அமரர் தளையசிங்கம் அவர்கள் பல்வேறு தளங்களை தரிசித்த வண்ணமும் ஆசிரியராகப் பணியாற்றி அவர் மாணவர்களுக்கு வழங்கிய அறிவுரைகளும் எவ்வாறு சமூகத்திற்கு பயனாகின என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துரைத்தன.

தங்கள் மண்ணைச் சார்ந்தவர் என்ற நோக்கில் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் அமரர் மு.தளையசிங்கம் அவர்கள் மீது ஆழமான நேசிப்பைக் கொண்ட அன்பர்கள் சிலரும் அங்கு வந்து இறுதிவரை அமர்ந்திருந்து தாங்கள் பற்று வைத்த படைப்பாளி பற்றிய புகழாரங்களை செவிமடுத்த பூரிப்போடு இல்லம் ஏகினர்.

**படங்களும் செய்தியும் - மலையன்பன்**

# கடந்த 08 – 04 – 2023 அன்று நடைபெற்ற ஸ்வரநய இசைக் கல்லூரியின் வருடாந்த இசை விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது

திருமதி. மனோராணி துசிதரன் அவர்களை குருவாகவும் நிறுவனராகவும் கொண்ட கனடா ஸ்வரநய இசைக் கல்லூரியின் வருடாந்த இசை விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

கடந்த 08-04-2023 சனிக்கிழமையன்று நடைபெற்ற இந்த விழாவில் சிறப்புக்குரிய அம்சமாக விழாவின் முதல் அரைப் பகுதி கர்நாடக இசை சார்ந்த பாடல்களை மாணவ மாணவிகள் பாட அவற்றிக்கு மிருதங்கம் வயலின் போன்ற பக்கவாத்தியக் கருவிகள் மெருகூட்ட மிகவும் சிறப்பாக அந்த பகுதிய நகர்ந்து சென்று சபையோரினதும் பெற்றோர்களினதும் பாராட்டுக்களைப் பெற்றது.













தொடர்ந்து மற்றைய அரைப்பகுதி இசைக் கலைஞர் அரவிந்தன் தலைமையில் கொடிகட்டிப் பறக்கும் “மெகா ரியுனர்ஸ்” இசைக்குழுவின் பின்னணி இசையோடு மெல்லிசைப் பாடல்களைக் கொண்டதாக தொடர்ந்து இறுதிவரை அழகாக நகர்ந்து சென்று அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றது.

விழாவினை சிறப்பாக தொகுத்து வழங்கினார் அக்னி இசைக்குழுவின் ஸ்தாபகரும் நிர்வாகியுமான திருமதி. சில்வியா பிரான்சிஸ்.

விழாவின் பிரதம விருந்தினராக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அழைக்கப்பெற்றிருந்தார். அவருடன் அவரது துணைவியாரும் கலந்து கொண்டார்.

அன்றைய தினம் ஸ்வரநய இசைக் கல்லூரியின் மாணவ மாணவிகளின் இசைத்துறை ஆற்றல் நன்கு வெளிப்பட்டது. அத்துடன் அவர்களை தகுந்த முறையில் கர்நாடக இசைப் பாடல்களையும் மெல்லிசைப் பாடல்களையும் மேடையில் இசைக்கருவிகளோடு இணைந்து பாடுமளவிற்கு பயிற்யளித்த குரு மனோராணி அவர்களுக்கும் அவரது இரண்டு புதல்விகள் ருதுனியா. ஸ்வரமி ஆகியோருக்கும் எமது பாராட்டுக்கள். அத்துடன் “மெகா ரியுனர்ஸ்” இசைக்குழுவின் தலைவர் அரவிந்தன் அவர்களுக்கும் எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தனது துணைவியார் சகிதம் குரு மனோராணி அவர்களுக்கும் “மெகா ரியுனர்ஸ்” இசைக்குழுவின் தலைவர் அரவிந்தன் அவர்களுக்கும் தமது பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் பாராட்டு மடல்களை வாசித்து வழங்கினார். அத்தருணம் நடன ஆசிரியை திருமதி. ஜனனி குமார் மற்றும இசையாசிரியை லசந்தி ராஜ்குமார் ஆகியோரும் மேடையில் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.



# தமிழ் ஊடகத்துறையில் பிரகாசித்த 'மாணிக்கம்'

- சிவா பரமேஸ்வரன்

அவரது பணி அளப்பரியது. அவரது வாழ்க்கை பயனுள்ளது. அவை போற்றப்பட வேண்டும்.

உள்ளூரில் மாணிக்கவாசகர், பொதுவாக பொன்னையா மாணிக்கவாசகம், பிபிசியின் சிங்கள மொழி ஒலிபரப்பான "சந்தேஷ்ய" நண்பர்களுக்கு அவர் மாணிக், தமிழோசை சகாக்களிற்கு அவர் "மாணிக்ஸ்" என்று பல பரிமாணங்களில் அவர் அறியப்பட்டவர். ஆனால் அன்பின் நிமித்தம் அவரை "வன்னித் தளபதி" என்றும் நாங்கள் அழைப்பதுண்டு.

அவரை எப்படி அழைத்தாலும், அவர் அவராகத்தான் இருந்தார். அதுதான் அவரது தனிச்சிறப்பு.

உலகளவில் அவர் "பிபிசி தமிழோசை" மாணிக்கவாசகம் என்றே பரவலாக அறியப்பட்டார். இலங்கையின் வலி மிகுந்த போர்க்காலத்தில், நேரடியாக களத்திலிருந்து உள்ளதை உள்ளபடி தமிழோசை மூலம் உலக மக்களிற்கு அறியத்தந்தவர். நெருக்கடிகளிற்கு இடையில் "உள்தகவல்களை" ஆதாரத்துடன் பெற்று உலகறியச் செய்தவர். "அவரச கோலத்தில் எதையும் அள்ளித் தெளிக்காமல்" மறுப்பேதும் தெரிவிக்க வேண்டிய நிலையையோ அல்லது செய்தியை மறுதலிக்கவோ தேவையின்றி செய்திகளை வழங்கி தனக்கும், தமிழோசைக்கும் பெருமை சேர்த்தவர்.

ஆனால் அதே தமிழோசை அவரை எப்படி அவமரியாதை செய்தது, மோசமாக நடத்தியது என்பதை பின்னால் சொல்கிறேன்.

மாணிக்கவாசம் "மாணிக்ஸ்" அவர்கள் ஊடகத்துறையின் பலம், பலவீனம், நெளிவு சுழிவுகளை நன்றாகப் புரிந்து கொண்டவர். ஒவ்வொர் ஊடகத்திற்கும் ஒவ்வொரு சிறப்புத்தன்மை உள்ளது என்பதை நன்கு அறிந்தவர். வானொலிக்கும் மற்ற ஊடகங்களிற்கும் உள்ள அடிப்படை வித்தியாசங்களை நன்கு உணர்ந்தவர். வானொலி அவர் சுவாசத்துடன் இணைந்தது. ஒலிபரப்பை தனது கைப்பிடியில் வைத்திருந்தவர் மாணிக்ஸ்.

வானொலிச் செய்தி அல்லது பெட்டகம் என்றால் என்ன, அதற்கான இலக்கணம் என்ன, அது எப்படி இருக்க வேண்டும், எப்படி இருந்தால் மக்கள் அதை விரும்புவார்கள், நேசிப்பார்கள் என்பதை அவர் தனது அனுபவத்தின் மூலம் நன்கு உணர்ந்திருந்தார். அதுவே அவரது வெற்றிக்கும், போர்க்காலத்தில் தமிழோசையின் வெற்றிக்கும் வழிவகுத்தது.

பேசுவது, எழுதுவது இரண்டிலும் அவர் வல்லவர். அதனால் தான் அவரால் இறுதிவரை ஈழத் தமிழ் ஊடக்த்துறையில் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பெற முடிந்தது. 30 நிமிட நிகழ்ச்சியில் அவரது பங்களிப்பு 3-4 மட்டுமே இருந்தாலும் அது முத்தாக இருந்தது. வானொலிக்கே உரிய குரல்களை, ஒலிகளை, இயற்கை சப்தங்களை அவர் எங்கு எந்தளவில் சேர்க்க வேண்டும் என்று புரிந்தவர். அதனால் அவரது செய்தித் தொகுப்பும் பெட்டகங்களும் சிறப்பு பெற்றன. அதேவேளை தனது பணியின் மீதிருந்த நம்பிக்கை மற்றும் திறமை காரணமாக அவருக்கு அந்த தொழில்ரீதியான தற்பெருமையும் இருந்தது. அதில் தவறேதும் இல்லை.

பல ஆண்டுகள் அவருடன் அன்றாடம் பேசும் வாய்ப்பு எனக்கிருந்தது. அது அன்றாட பிபிசி தமிழோசை செய்திகளிற்காக மட்டுமல்ல, போர், உள்நாட்டு - வெளிநாட்டு அரசியல் ஆகியவற்றில் தொடங்கி, இராணுவத்தின் பொய்களைத் சீரணித்து, உள்ளூரில் வவுனியா பேருந்து நிலையப் பிரச்சனையும் தாண்டி, தமிழ் அரசியல்வாதிகளின் உளரல்களையும் கடந்து, பிட்டு, இடியப்பம், சொதி, சம்பல், சாம்பார், இட்லி, தோசை, பிள்ளைகளின் நலன்கள் என்று பல விடயங்கள் எமது உரையாடலில் இருக்கும்.

தமிழோசை நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட நாளைக் கடந்து அடுத்த நாள், அடுத்த வாரம் என்ன செய்யலாம், செய்ய முடியும் என்பது போன்ற ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் எங்களிடையே தொடர்ச்சியாக நடைபெற்றன. உங்கள் மனங்களில் ஒரு கேள்வி எழலாம்!

"ஒரு செய்தியாளர் அடுத்த நாள், அடுத்த வாரம் என்ன செய்யலாம்" என்று எப்படி இன்றே திட்டமிட முடியும்? எதையும் முடியும் என்று நாங்கள் இருவரும் செய்து காட்டியவர்கள் என்பதில் மகிழ்ச்சி. அது எப்படி?




ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். நார்வே அல்லது ஜெனீவாவில் சமாதனாப் பேச்சு நடைபெறுகிறது. அதற்கான திகதிகள் தெரிந்தவுடனேயே நாங்கள் இருவரும் அது தொடர்பில் பேச ஆரம்பித்துவிடுவோம். என்னவோ நாங்கள் தான் அந்த இருதரப்பு மாதிரி. பேச்சுவார்த்தை தினத்திற்கு முதல் நாள் எப்படியான ஒரு முன்னோட்டத்தை தயாரிக்கலாம். கடந்த முறை இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எந்தளவிற்கு பலனைத் தந்தது, அது வெற்றியா தோல்வியா, இம்முறை என்னென்ன விடயங்கள் புதிதாகத் முன்வைக்கப்பட்டுள்ளன, யாரெல்லாம் பேச்சுவார்த்தைகளிற்குச் செல்கிறார்கள், அவர்களிடம் என்ன கேள்விகள் கேட்க வேண்டும், மக்கள் இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பில் என்ன சொல்கிறார்கள், அரசியல் அவதானிகளின் கருத்துக்கள் என்ன என்று இப்படி பல விடயங்கள் எமது விவாதத்தில் இடம்பெற்று அதன் அடிப்படையில் எப்படி அடுத்துவரும் நாட்களில் நிகழ்ச்சிகளை திட்டமிடலாம் என்பதெல்லாம் எமது அன்றாட தொழிற்சார் உரையாடல்களின் ஒரு பகுதியாக இருந்தது.

இப்படி தமிழ் மக்களின் நலன்களை மனதில் நிறுத்தி, செய்திகளை பக்கச்சார்பின்றி வழங்கினாலும், உரிய பாராட்டோ அல்லது கொடுப்பனவோ - அவர் உட்பட - இலங்கைச் செய்தியாளர்களாக தமிழோசைக்கு இருந்த யாருக்குமே அளிக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை. அதற்கு தலைமையால் கூறப்பட்ட காரணம் அவர்கள் நமது "முழு நேரப் பணியாளர்கள் இல்லை" பகுதி நேர செய்தியாளர்கள், எனவே அவர்களுக்கு அன்றாடம் கொடுக்கப்படும் "உழைப்பிற்கேற்ற ஊதியம்" போதுமானது என்று தலைமை மிகச்சாதாரணமாகத் தெரிவிக்கும். அவருக்கு தாளமடிக்க சிலர். "மாஸ்டர்" நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கும் நாட்களில் மாணிக்ஸ் மற்றும் உதயகுமார் (மட்டக்களப்பு) ஆகியோருக்கு கொண்டாட்டம் தான் என்று எங்களை இடித்துரைபார்கள் தலைமையும் அவரது கைதடிகளும். "மாஸ்டரின்" தினங்களில் மட்டும் எப்படி மாணிக்ஸ்ூம் உதயகுமாரும் தேடித் தேடித்தேடி செய்திகளை அளிக்கின்றனர்? என்றெல்லாம் ஏளனம். என்னை தமிழோசையில் மட்டுமல்ல சகோதர சேவையான பிபிசி சிங்கள ஒலிபரப்பான சந்தேஷ்யவிலிருந்த நண்பர்களும் என்னை "மாஸ்டர்" என்றே அழைத்தனர். அது ஏனென்று அவர்களிற்கே வெளிச்சம்.

எனினும் இந்த விமர்சனங்களைக் கடந்து நான் துணிவாக மாணிக்ஸ் அவர்களை எமது வட இலங்கைச் செய்தியாளர் என்றும் திரு உதயகுமார் அவர்களை எமது கிழக்கிலங்கைச் செய்தியாளர் என்றும் எனது கடைசி நாள் ஒலிபிரப்பு வரை கூறினேன்.

"நீங்கள் எப்படி அவரை எமது செய்தியாளர் என்று கூறலாம்" இது தலைமையின் வலுவில்லாத வாதம்.

"ஏன் கூறக்கூடாது. அவர்கள் நமக்காத்தானே செய்திகளை பெரும் நெருக்கடிகளிற்கு இடையில் அளிக்கிறார்கள், அதில் என்ன தவறு" இது எனது நியாயம்.

"வவுனியாச் செய்தியாளர், மட்டக்களப்புச் செய்தியாளர் என்றுதான் இவ்வளவு ஆண்டுகளாக கூறி வருகிறோம், அதுவே மரபு".



"ஒருவருக்கு பெருமை சேர்க்கும் என்றால், மரபுகளை மீறுவதில் என்ன பிரச்சனை. இவ்வளவு நாள் செய்த தவறிற்கு பிராயச்சித்தம் தேடுவது போல் அந்த மரபை மீறி, அவர்களிற்குரிய அங்கீகாரத்தை அளிப்போம்".

இந்த விவாதம் ஒரு கட்டத்தில் அன்றாட நிகழ்வாகியது.

நான் எனது நிலைப்பாட்டில் இறுதி நாள் வரை உறுதியாக இருந்தேன். அதன் காரணமாக சிலவற்றை இழந்தேன். எனினும் எமது செய்தியாளர்களுக்கு ஒரு அங்கீகாரத்தை பெற்றுத்தந்ததில் மகிழ்ந்தேன். எனினும் தலைமையும் அவரது கைதடிகளும் எனது நிலைப்பாட்டுடன் உடன்படவில்லை, நானும் அதுபற்றி கவலைபப்படவில்லை.

தமிழோசையில் அன்றாடம் முதல் தொலைபேசி அழைப்பு மாணிக்ஸ் அவர்களுக்குத்தான் இருக்கும். அந்த அழைப்பிற்கு அவரும் தயாராகவே இருப்பார். "என்ன மாணிக்ஸ்... என்ன நடக்குது நாட்டிலே". அன்றாடம் லண்டனில் நாங்கள் காலை அலுவலகம் வருவதற்கு முன்னரே, அவர் உள்ளூர் செய்திகள் பற்றிய குறிப்புகளை தயாராக வைத்திருப்பார். பிபிசி தமிழோசை என்ன எதிர்பார்க்கும், எப்படிச் சொனால் அது எடுபடும் என்பது அவருக்கு கைவந்த கலை. சில நேரங்களில் ஒலிபரப்பிற்கு ஒரு மணி நேரமே இருக்கும் போது "பிரேக்கிங் நியூஸ்" என்று மிக முக்கியமான செய்தி இருந்தாலும், அந்த ஒரு மணி நேரத்திற்குள் அதை செய்தியாக்கி தமிழோசைக்கு அவர் தந்த நாட்கள் ஏராளம் ஏராளம்.

மாணிக்ஸ் அவர்களின் செய்தி சேகரிப்பிற்கு மிகவும் முக்கியமானது அவர் பேணிவந்த தொடர்புகள். அந்த தொடர்புகள் காரணமாக அவர் பல இன்னல்களையும் எதிர்கொண்டார். ஆனால் அதை அவர் பொருட்படுத்தவில்லை. அவரது ஒரே சிந்தனை செய்தி.....செய்தி.....செய்தி.

போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது, பல ஊடகவியலாளர்களைப் போன்று அவருக்கும் கடும் அச்சுறுத்தல் இருந்தது.. உயிராபத்துக்கள் அவரை சூழ்ந்திருந்தன. அதே நெருக்கடியில் மட்டக்களப்பிலிருந்த எமது செய்தியாளர் உதயகுமார் அவர்களிற்கும் இருந்தது. பாதுகாப்பு கருதி அவர்கள் இருவரையும் லண்டனிற்கு சிலகாலம் அழைத்து வந்து, காலம் சீராகும் போது மீண்டும் இலங்கைக்கு அனுப்பலாம் என்ற ஒரு கருத்து எழுந்தது. ஆனால் தமிழோசை தலைமையோ அதே பல்லவி, அவர்கள் நமது செய்தியாளர்கள் இல்லை, நமக்கும் செய்திகளை அளிக்கிறார்கள், அவ்வளவே.

ஒரு நாள் தமிழ் மற்றும் சிங்கள சேவையின் பொதுவான கூட்டமொன்றில் இது விவாதிக்கப்பட்டது. சிங்கள சேவையின் தலைவரும் பெரும்பாலானவர்களும் "நமது" செய்தியாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர். விஷயம் மேலிடம் வரை சென்றது. மேலிடமும் நியாயத்தை உணர்ந்து தமிழ் - சிங்களச் செய்தியாளர்களை லண்டனிற்கு அழைத்து வரலாம் என்றது. ஆனால் தமிழோசை செய்தியாளர்களிற்கு அந்த பாதுகாப்பு அளிக்கப்படவில்லை.

இதில் முக்கியமான மற்றொன்றையும் இந்த சமயத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் அந்த உள்நாட்டு யுத்தத்தை மையப்படுத்தியே தமிழோசை செயல்பட்டது. உலகமும் தமிழோசை செய்திகளையே பிரதானமாக எதிர்பார்த்து காத்திருந்தன. ஆனால் அப்படியான சூழலில் தலைநகர் கொழும்பிலோ, வடக்கா தமிழர்களின் அரசியல் தலைமையகமாக விளங்கிய யாழ்ப்பாணத்திலோ, கிழக்கிலோ அல்லது மலையகத்திலோ தமிழோசைக்கென்று முழுநேர செய்தியாளர்கள் இருக்கவில்லை. ஆனால் அதேவேளை சென்னையிலும், புதுடில்லியிலும் முழுநேர செய்தியாளர்கள் இருந்தனர். இது ஏன்? அதற்கு தலைமை ஒரு நாளும் பதிலளித்ததில்லை.

ஆனால் மாணிக்ஸின் ஆழ் மனதில் தங்களை முழுநேர செய்தியாளர்களாக பிபிசி தமிழோசை அங்கீகரிக்கவில்லை/நியமிக்கவில்லை என்பது இருந்தாலும், ஒரு நாளும் அவரது செய்தியிலோ அல்லது அதை வழங்குவதிலோ எந்த குறையும் இருக்காது.

அவர் வானொலியை நேசித்தார், சுவாசித்தார். இன்று அதே வானலையில் கலந்துள்ளார். போர்க்காலத்தில் ஒரு செய்தியாளர் கடுமையான நெருக்கடிகளிற்கு இடையே சுயத்தை இழக்காமல் எப்படி பணியாற்ற முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் பொன்னையா மாணிக்கவாசகம்.

அவர் நினைவை போற்றும் வகையில், இலங்கையில் ஆண்டுதோறும் சிறப்பாக பக்கசார்பின்றி செயற்படும் செய்தியாளர் ஒருவருக்கு அவரது பெயரில் ஒரு விருதை ஏற்படுத்தி அதை அளிப்பது ஈழத் தமிழ் ஊடகத்துறையில் ஒரு மாணிக்கமாக திகழ்ந்த மாணிக்ஸ் அவர்களுக்கு செலுத்தும் ஒரு அஞ்சலியாக அமையும் என்று நான் கருதுகிறேன். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

# வெடுக்குநாறி சிவன் கோவில் இடிப்பு விவகாரம் இந்தியப் பிரதமரின் கவனத்திற்குச் செல்கிறது

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



**வெ**டுக்குநாறி ஆலய அழிப்பு விவகாரம் ஆலய நிர்வாகம் கோரியபடி பாரதப் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் கோவில் நிர்வாகத்தினரிடம் உறுதியளித்தார்.

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் திங்கட்கிழமை (10) சந்தித்தார்.

அந்த ஆலயம் இடித்து அழிக்கப்பட்டது தொடர்பிலும், தொடர்ச்சியாக இந்து ஆலயங்கள் மீது நடைபெறும் தாக்குதல்கள் குறித்தும் பலதரப்பினர் இந்தியத் தூதரின் பார்வைக்கு எடுத்துச் சென்றனர். வெடுக்குநாறி ஆலய நிர்வாகமும் இந்தியத் தூதர் பாக்லேயைச் சந்தித்து முறையிட நேரம் கோரியதை அடுத்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது இதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்ட ஆலய நிர்வாகத்தினர், சட்டத்தரணி மற்றும் அகில இலங்கை இந்து மாமன்ற உறுப்பினர்கள் என ஐவர் கல்ந்து கொண்டனர். இதேபோன்று தூதரகத்தின் சார்பிலும் தூதுவர், பிரதி தூதுவர் அதிகாரிகள் என ஐவர் பங்குகொண்டனர்.



இதன் போது வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வரலாற்று ஆவணங்கள், ஆலயம் மீது போடப்பட்டுள்ள வழக்கு, ஆலய விக்கிரகங்கள் அழக்கப்பட்ட ஆதாரங்கள், அவை தொடர்பில் எழுந்த சர்ச்சை என அனைத்தும் ஆவண ரீதியாக பாரதப் பிரதமரிடம் சபர்ப்பிக்கும் நோக்கில் தூதுவரிடம் கையளிக்கப்பட்டதோடு இது தொடர்பான கோரிக்கை மனுவும் இலங்கைக்கான இந்தியத் தூதரிடம் கையளிக்கப்பட்டது.

இவற்றைப் பெற்றுக்கொண்ட தூதுவர் “உங்கள் கோரிக்கை மனு மற்றும் ஆவணங்கள் பாரதப் பிரதமிரற்கு அனுப்பி வைக்கப்படும்” என உறுதியளித்தாக கூட்டத்தில் பங்குபெற்றோர் கூறுகின்றனர்.

வெடுக்குநாறி ஆலயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி கனடா உதயன் பத்திரிகையில் தமிழர் தாயகப் பகுதிகளில் தொடரும் மதம் மற்றும் கலாச்சார அழிப்புகள் தலைப்பில் விரிவான வெளியாகியிருந்தது.



அந்த கட்டுரையில் “இலங்கையில் உள் நாட்டுப போர் முடிந்து 14 ஆண்டுகளானாலும் இன்னமும் மதம் மற்றும் கலாச்சார அழிப்புக்கள் தொடருகின்றன என்பதனை அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்கள் தெளிவாக எடுத்துக காட்டுகின்றன”.

மேலும் தொல்லியல் திணைக்களம் குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதி இம்மாதம் இந்தியா செல்லவுள்ளதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன. அவர் அவ்வாறு செல்லும் சமயம், இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல், தொல்லியல் பூமி, பௌத்தச் சின்னங்கள் போன்ற காரணங்களைக் கூறி தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள காணிகளை இராணுவத்தினர் மற்றும் பௌத்தசாசன அமைச்சின் மூலம் தொடர்ந்து அபகரிக்கும் நடவடிக்கை குறித்து இந்தியா தனது ஆழ்ந்த கவலையை தெரிவிக்கும் என்றும் புதுதில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

“இந்தியா இப்படியாக ஆலயங்கள் மீதான தாக்குதல்களை பாரதூரமான விடயமாக பார்க்கும், மௌனமாக இருக்காது” என்கிற செய்து இலங்கை ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்படும் என்றும் அறியப்படுகிறது.



வெடுக்குநாறியில் இடித்து அழிக்கப்பட்ட அதே இடத்தில் மீண்டும் ஒரு சிவலிங்கத்தை மீண்டும் பிரதிஸ்டை செய்ய எடுத்த முயற்சிகளும் தொல்லியல் திணைக்களம் மற்றும் பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டன. அந்த நிகழ்விற்கு வந்திருந்த அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

அந்த பிரதேசம் தொடர்பில் ஒரு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், அங்கு எவ்விதமான கட்டுமானப் பணிகளையும் அனுமதிக்க முடியாது என்று தொல்லியல் திணைக்களம் வலியுறுத்தியதை அடுத்து, சிவலிங்கத்தை பிரதிஸ்டை செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அந்த பிரதேசம் தொல்லியல் பூமி, அங்கு செல்வதற்கு யாருக்கும் அனுமதி இல்லை என்று அந்த திணைக்களம் கூறுகிறது. அப்படியிருந்தால், சுமார் 350 ஆண்டுகள் பழமையானது என்று கூறப்படும் அந்த ஆலயப் பகுதிக்குள் ஊடுறுவி அங்கிருந்த விக்கிரகங்களை உடைத்து எறிந்தவர்கள் எப்படி அங்கு சென்றார்கள் என்ற கேள்விக்கு இதுவரை பதிலில்லை.

இந்தியா இந்த விடயத்தில் நடவடிக்கை




எடுக்க வேண்டும் என்று நல்லை ஆதீனமும் அறிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






# ரணில் சமாளிக்கிறார்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



கடந்த ஆண்டு இதே காலம் எரிபொருள், எரிவாயுவுக்காக வரிசையில் நின்ற மக்கள், இந்த ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக பல்பொருள் அங்காடிகளிலும் புடவை கடைகளிலும் வரிசையாக நிற்கிறார்கள். இது ஒரு காட்சி மாற்றம். ரணில் விக்ரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் பொருளாதாரத்தை படிப்படியாக நிமிர்த்தி வருகிறார் என்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தும் காட்சி மாற்றம்.

அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து தொடர்ச்சியாக இவ்வாறு காட்சி மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கிறார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு நிமிர்ந்து எழுகிறது என்று ஒரு தோற்றத்தை அவர் வெற்றிகரமாகக் கட்டியெழுப்பி வருகிறார். பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை ஒரு பெரிய அடைவாக அவர் காட்டுகிறார். ரணிலைத் தவிர வேறு யார் அவருடைய இடத்தில் இருந்தாலும் இதுபோன்ற மாற்றங்களை ஏற்படுத்த முடியாது என்று படித்த சிங்கள நடுத்தர வர்க்கம் நம்பத் தொடங்கிவிட்டது. சிங்கள நடுத்தர வர்க்கம் மட்டுமல்ல, கீழ் நடுத்தர வர்க்கம், போதிய வருமானத்தை பெறாத பிரிவினர் போன்றவர்களும்கூட நாடு ஏதோ ஒரு விதத்தில் முன்னேறுவதாக நம்புகிறார்கள். அண்மையில் தொழிற்சங்கங்கள் அழைத்த வேலை நிறுத்தங்கள் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறவில்லை. அதற்கு காரணம் மக்கள் போராடும் மனோநிலையில் இல்லை என்பதே.

தொழிற்சங்கப் போராட்டங்கள் எதிர்பார்த்த பெரு வெற்றிகளை பெறாததற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் மக்களுக்கு கஷ்டங்கள் பழகிவிட்டன. இயல்பின்மையை ஓர் இயல்பாக அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். இரண்டாவது காரணம், ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தி வரும் காட்சி மாற்றங்கள்.

எரிபொருள் எரிவாயு விநியோகத்தை ஏதோ ஒரு வழமைக்கு கொண்டு வந்தமை ஒரு பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது. நாட்கணக்காக எரிபொருளுக்காக வரிசைகளில் காத்திருந்த ஒரு நாடு, இப்பொழுது வரிசைகளில் நிற்பதில்லை. க்யூ ஆர் கோட் எனப்படுவது ஒரு அற்புதமான தீர்வு. அது எரிபொருள் நுகர்வை மட்டுப்படுத்தியது. அதன்மூலம் எரிபொருள் பதுக்கப்படுவதைக் குறைத்தது. மேலும் எரிபொருளுக்காக வெளியே போகும் டொலர்களையும் குறைத்தது. அதனால் எரிபொருள் விநியோகம் ஓரளவுக்குச் சீராகியது. ஒரு நாடு எதிர்கொண்ட மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் ஓர் இலத்திரனியல் தீர்வு எப்படி ஒரு நிவாரணமாக அமைய முடியும் என்பதற்கு கியூஆர் கோட் ஒரு சிறந்த முன்னுதாரணம். அங்கேயும் விமர்சனங்கள் உண்டு. நாளாந்தம் தூர இடங்களுக்கு பயணம் செய்பவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் கோட்டா காணாது என்று கூறுகிறார்கள். ஆனால் எரிபொருள் வினியோகம் ஏதோ ஒரு வழமைக்கு வந்துவிட்டது என்பதே பொதுசன அபிப்பிராயமாக உள்ளது.

மேலும் அரசாங்கம் விலைகளை படிப்படியாகக் குறைத்து வருகிறது. குறிப்பாக புத்தாண்டை முன்னிட்டு சமையல் எரிவாயுவின் விலை ஆயிரம் ரூபாய்க்கு மேல் குறைக்கப்பட்டது. இதுபோன்ற மாற்றங்களின்மூலம் மக்களுடைய கோபமும் சலிப்பும் ஒப்பீட்டளவில் குறைந்து வருகின்றன. அதனால் மக்கள் தொடர்ச்சியாகப் போராடத் தயார் இல்லை.

அது மட்டுமல்ல, உள்ளூராட்சி சபைத் தேர்தலை குறித்து மக்கள் இப்பொழுது பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. மக்கள் மட்டுமல்ல எதிர்க்கட்சிகளும் அதைப்பற்றி குரல் எழுப்புவது குறைந்து வருகிறது. சில மாதங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நோக்கிக் கட்சிகளின் கவனத்தைக் குவிய வைத்து, காசு செலவழித்து சுவரொட்டிகளை அடிக்க வைத்ததில் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்த வெற்றியைப் பெற்றுவிட்டார். நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பெரிய காசைச் செலவழித்து சுவரொட்டிகளை அடித்த எதிர்க்கட்சிகள் அந்த சுவரொட்டிகளை சுவர்களில் ஒட்டிவிட்டு தேர்தல் வருமா வராதா என்ற நிச்சயமின்மைகளோடு காத்திருக்க, ரணில் விக்கிரமசிங்க மிகவும் தந்திரமாக நிர்வாக நடைமுறைகளைச் சுட்டிக்காட்டி தேர்தலை ஒத்திவைத்துக் கொண்டே போகிறார். தேர்தல் விடயத்தில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஒப்பீட்ளவில் குறைந்து வருகிறது. இந்த விடயத்தில் ரணில் எதிர்க்கட்சிகளை மிகத் தந்திரமாக சமாளித்து விட்டார் என்று சொல்ல வேண்டும். அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை விடவும் ஜனாதிபதி தேர்தலையே இலக்குவைத்து உழைப்பதாகத் தெரிகிறது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலை அடுத்த ஆண்டு நடத்த வேண்டும். அதற்கிடையில் அவர் தன் சொந்தக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும். அவருடைய சொந்தக் கட்சியான யுஎன்பியைப் பலப்படுத்துவது என்பது சஜித் பிரேமதாசாவை எப்படி உடைப்பது என்பதுதான். அந்த வேலையை அவர் ஏற்கனவே தொடங்கி விட்டார். எனினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் ஒரு பொது வேட்பாளராக களமிறங்குவது பற்றியே சிந்திப்பதாகத் தெரிகிறது. ராஜபக்ஷைகளுக்கு அவர் தேவை. ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செல்வாக்கிழந்து காணப்படுகிறார்கள். ஒரு நெருக்கடியான காலத்தைக் கடப்பதற்கு அவர்களுக்கு ரணில் தேவை. அதிலும் குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த ஜனாதிபதியாக தயார்படுத்துவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ரணிலைப்போல பொருத்தமான வேறு யாரும் அவர்களுக்கு இல்லை. எனவே ரணிலை வைத்துக் கொண்டே அவர்கள் தங்களைப் பலப்படுத்த முயற்சிப்பார்கள். இந்த அடிப்படையில் சிந்தித்தால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் ரணிலையே ஆதரிக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகமாகத் தெரிகின்றன.

எனவே இப்பொழுது ரணில் முன்னால் உள்ள பெரிய சவால்கள் மூன்று. ஒன்று பொருளாதாரத்தை நிமித்துவது. இரண்டு யு.என்.பியைப் பலப்படுத்துவது. மூன்று இனப்பெருச்சினையைத் தீர்ப்பது.

பொருளாதாரத்தை மீட்கும் நடவடிக்கைகளை அவர் ஏற்கனவே தொடங்கி விட்டார். அவருக்குத் தெரியும் அவருடைய காலத்துக்குள் அதை செய்வதென்றால் அவரிடம் மந்திரக்கோல் இருக்க வேண்டும். எனவே அவர் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒப்பீட்டளவில் மாற்றத்தைக் கொண்டு வந்தால் போதும் என்று சிந்திக்கிறார். இதில் தனக்குள்ள வரையறைகள் அவருக்குத் தெரியும்.

இரண்டாவது யூ.என்.பியைப் பலப்படுத்துவது. அதை வேறு வார்த்தைகளில் சொன்னால் சஜித்தை பலவீனப்படுத்துவது. பொருளாதாரத்தை மெல்ல மெல்ல நிமிர்த்தினால் அதுவே சஜித்தைப் பலவீனப்படுத்திவிடும். அதே சமயம் பதவி ஆசைகளைக் காட்டி சஜித்தோடு நிற்கும் முன்னாள் யூ.என்.பிக்காரர்களை கழட்டி எடுக்க வேண்டும். அதை அவர் விரைவாகச் செய்வார்.

மூன்றாவது, இனப்பிரச்சினையைத் தீர்ப்பது. அது தன்னால் முடியும் என்று ரணில் கருதுவதாகத் தெரியவில்லை. தனக்குக் கிடைத்திருக்கும் ஒன்றரை ஆண்டு காலத்துக்குள் அதைச் செய்ய முடியாது என்பது அவருக்கு நன்கு தெரியும். சில சமயம் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டாலும் அந்த ஐந்து ஆண்டு காலகட்டத்திலும் கூட ஒரு தீர்வை கொண்டு வரலாமா என்பது அவரைப் பொறுத்தவரை சந்தேகந்தான். இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பது ஒரு சிங்களத் தலைவரைப் பொறுத்தவரை ரிஸ்க் எடுப்பது. அப்படி ஒரு ரிஸ்க்கை எடுக்க கூடிய தலைவராக ரணிலைப் பார்த்தால் தெரியவில்லை. இப்போதுள்ள பதவிக்காலத்தில் ஒன்றரை ஆண்டு காலத்துக்குள் அவர் ரிஸ்க் எடுக்கவே மாட்டார். இனப்பிரச்சினையில் கைவைக்கப் போய் எல்லாவற்றையும் கொட்டிக் குலைக்க அவர் தயாராக இருக்க மாட்டார். தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்க முயற்சி என்று அவர் கூறுவது அந்த நோக்கத்தில்தான்.

இலங்கைத்தீவின் சிங்கள பவுத்த அரசாட்சியைப் பொறுத்தவரை நல்லிணக்க முயற்சிகள் என்றால் நாடகங்களே. எனவே இந்த ஒன்றரை ஆண்டை கடப்பதற்குரிய நாடகமாகவே அதைப் பார்க்கவேண்டும். 2015ல் அவர் ஆட்சிக்கு வந்தபோதும் அப்படி ஒரு நாடகத்தை ஆடினார். அந்த நாடகத்தை 2018 ஆம் ஆண்டு மைத்திரி குழப்பினார். மீண்டும் அதே நாடகம். எனவே அவருடைய இப்போதுள்ள பதவிக்காலத்தில் அவர் இனப்பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்க மாட்டார். குறிப்பாக தமிழ்க் கட்சிகள் அதற்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்பதும் அவருக்கு தெரியும். எனவே இந்தவிடயத்தில் ரிஸ்க் எடுப்பதை விடவும் காலத்தை கடத்துவதே பொருத்தமானது என்று அவர் கருதக்கூடும். இருக்கின்ற ஒன்றரை ஆண்டுக்குள் தன்னை நன்கு பலப்படுத்திக் கொண்ட பின் அடுத்த ஆட்சி காலத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு கொண்டு வருவதென்றால் அங்கேயும் அவர் ரிஸ்க் எடுக்க வேண்டியிருக்கும்.

தனக்கு முன் இருந்த தலைவர்கள் ரிஸ்க் எடுக்கத் துணியாத ஒரு விடயத்தில் தான் ரிஸ்க் எடுக்கப்போய் தன்னுடைய வாழ்வின் இறுதிக்கட்டத்தில் கிடைத்திருக்கும் சிம்மாசனத்தை ஏன் இழக்க வேண்டும் என்று அவர் சிந்திப்பாராக இருந்தால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் முயற்சிக்க மாட்டார். தீர்ப்பது போல ஒரு நாடகத்தை ஆடுவார். அவ்வளவுதான்.

ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் பொருளாதாரத்தை முழுமையாக நிமிர்ந்த முடியாது. எனது கட்டுரைகளில் நான் திரும்பத் திரும்ப கூறுவதுபோல, பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் நேரடி விளைவு. பொருளாதார நெருக்கடியை நிரந்தரமாகத் தீர்ப்பது என்றால் அதற்கு இனப்பிரச்சினியை முதலில் தீர்க்க வேண்டும். இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்றால் நாட்டின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை மாற்றத் தயாராக இருக்க வேண்டும். ஆனால் ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றுவது என்பது சிங்கள பௌத்த அரசாட்சிச் சிந்தனையை மாற்றுவது. அது நூற்றாண்டு கால சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விடயம். ரணில் அப்படியெல்லாம் புரட்சிகரமான மாற்றங்களை செய்யக்கூடிய ஒருவர் அல்ல. இருக்கிற நிலைமைகளை எப்படிச் சமாளிக்கலாம். பதவியில் இருக்கும்வரை எப்படி ஒப்பீட்டளவில் முன்னேற்றத்தை காட்டலாம், இந்தியாவையும் அமெரிக்காவையும் சீனாவையும் ஒரேதூரத்தில் வைத்து எப்படிக் கையாளலாம் என்றுதான் அவர் யோசிப்பார். அதாவது சமாளிப்பது. வருகிற ஒன்றரை ஆண்டுகளை சமாளித்து விட்டால் அடுத்த பதவிக்காலம் அவருக்கு காத்திருக்கும். அங்கேயும் சமாளித்தால் சரி. பிரச்சினையை அடுத்த தலைவரிடம் கையளித்து விட்டு ஓய்வுபெறலாம்.





# ரணில் என்ற 'மாய மான்' காட்டும் 'தீர்வு' என்ற 'கானல் நீர்'!

வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

• மூர்க்கத்தனமாக மேலெழும்பும் ரணில் - ராஜபக்ஷ தரப்பு.
• தென்னிலங்கை சக்திகளுடன் தமிழர் தரப்பு ஜனாதிபதி தேர்தல்குறித்து இணைந்தால் என்ன?

இலங்கையின் இன விவகாரம் திர்வு காணப்படுமா?, இலங்கை அரசாங்கம் திர்வு காணுமா?, இந்திய அரசாங்கம் தீர்வு காணுமா?, சர்வதேச சமூகம் இன விவகாரத்துக்குத் தீர்வு காணுமா?, தமிழ் மக்கள் பெரு நம்பிக்கை வைத்துள்ள ஐ.நா அதனுடன் இணைந்த மனித உரிமைப்பேரவை தீர்வு காணுமா?, தமிழ்த் தலைமைகள் தீர்வினைக் கண்டு விடுவார்களா?, புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தீர்வினைக் காண்பார்களா?

தமிழர் விவகாரத்துடன் தொடர்புடைய மேற்குறிப்பிட்ட தரப்பினர் அனைவருமே பேசுவது தமிழர் விவகாரத்துக்கான தீர்வு பற்றியதுதான். ஆனால் தீர்வுதான் இன்று வரை வந்தபாடாக இல்லை.

மேலோட்டமாகப் பார்த்தால் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க இத்தனை தரப்புக்களா என மலைக்க வைக்கும்.

தமிழ்த் தலைமைகளும் மேற் கூறிய தரப்புக்களின் பினாமியாக நின்று தமிழ் மக்களை நம்பிக்கையுடன் கூட்டிச் சென்று நடுவழியில் கைவிட்டு பேசாமல் ஒழிந்து கொள்வர். மீண்டும் எவராவது ஒரு தரப்பின் வாலைப் பிடித்துக் கொண்டு ஓடிக் களைத்து பாதியில் பயணத்தை முடித்துக் கொள்வர்.

• இலங்கையின் இன விவகாரம் திர்வு காணப்படுமா?

மொத்தத்தில் இனவிவகாரத்தக்கான தீர்வு காணப்படுமா என்ற தமிழ் மக்களின் வினாவுக்கு தற்போதைக்கு இல்லை என்ற பதிலைத்தான் திட்டவட்டமாகக் கூறக் கூடியதாக இருக்கும். இது கசப்பான உண்மை. ஆனால் இதுதான் யதார்த்தம் என்பதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

• உள்ளூராட்சி சபைகளே - அதிகாரப் பகிர்வு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது. பல சுற்றுக்கள் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின்போது பேச்சுவார்த்தையின் பெறுபேறுகுறித்து இரு தரப்பினருமே கருத்துத் தெரிவிக்க முன்வரவில்லை. ஆனால் இந்தப் பேச்சு வார்த்தை தொடர்பாக ஆராய்ந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் - அரசதரப்பினருக்கும் இடையில் போச்சுவார்த்தை ஆரம்பமாகிய முதல் நாளிலேயே தீர்வுக்கு அரச தரப்பினர் முற்றுப் புள்ளியினை வைத்திருந்தனர். அதாவது அதிகாரப் பகிர்வு உள்ளூராட்சி சபைகளுக்கு மேலாக அமையாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். மஹிந்த ராஜபக்ஷ அரசதரப்புக்கு அவ்வேளையில் பேச்சுவார்த்தை தேவைப்பட்டதால் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தினர். பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின் பேச்சுவார்த்தை ஒரு அங்குலம்தானும் நகரவில்லை என கூட்டமைப்பு அறிவித்தது. பேச்சுவார்த்தை ஒரு அங்குலம்தானும் நகராமல் எவ்வாறு பேச்சுவார்த்தை பல சுற்றுக்களைக் கடந்தது என்பதற்கான காரணத்துக்கான முடிச்சினை இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவிழ்க்கவில்லை.

• ஜனாதிபதியின் அண்மைய அறிவிப்பு

ஜனாதிபதி 75வது சுதந்திரதின நிகழ்வுக்குள் இனவிவகாரத்துக்குத் தீர்வு காணப்படும் என்று அண்மையில உறுதியளித்தார். அது நிறைவேற்றப்படவில்லை. இதே காலகட்டத்தில் ரணில் விக்ரமசிங்க 13வது திருத்த சட்டத்தை முழுமையாக அமல்படுத்தப் போவதாக அறிவித்தார். இதற்கு எதிராக பௌத்த பிக்குகள் வீதியில் இறங்கினர். அவ் வேளையில் நாடாளுமன்றத்தில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரப் பகிர்வுக்கு மாகாண சபைகளைக்கூட தீர்வாக முன்வைக்கவில்லை. உள்ளூராட்சி சபைகளையே தீர்வாக குறிப்பிட்டார். மொத்தத்தில் சிங்களத் தலைமைகள் அதிகாரப் பகிர்வில் தீர்மானமிக்க முடிவுடன் உள்ளன என்பதையே காட்டுகின்றன.

இனவிவகாரத்தை நோக்கிய விடயத்தில் புவிசார் அரசியல் காத்திரமான அழுத்தத்தை பிரயோகிக்கும் நிலையில் இல்லை என்பதை தென்னிலங்கை சரியாகவேக் கணக்கிட்டு வைத்துள்ளது.

• இலங்கை அரசாங்கம் திர்வு காணுமா?

இனவிவகாரத்தக்கான தீர்வினை சிங்கள ஆளும் வர்க்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்கங்கள் திர்வு காணுமா? என்ற கேள்விக்கும் இல்லை என்பதே பதிலாக இருக்கின்றது.

• சர்வதேச சமூகம் இன விவகாரத்துக்குத் தீர்வு காணுமா?

இலங்கையில் கால் பதித்த பெரும்பாலான வெளி நாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயரதிகாரிகள் முகக வாந சநஉழயசன ஆக விட்டுச் சென்ற பதிவுகளாக இருப்பது மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் சிங்கள அரசாங்கங்கள் இனவிவகாரத்துக்கான தீர்வினை வழங்கப் போவதில்லை என்பதுதான். ஆனால் இதில் விசித்திரம் என்னவெனில் இவர்கள் சார்ந்த நாடுகள் இனவிவகாரத்திற்குத் தீர்வு காணப்பட வேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுதான். தூதரக அதிகாரிகளின் தனிப்பட்ட கருத்தக்கள் முகக வாந சநஉழயசன இருந்தபோதும் அதிகாரபூர்வமாக இதனை கூறும் நிலையில் அவர்கள் இல்லை என்பதுதான்.

அதேவேளையில் இந்தியா உற்பட சாவதேச நாடுகள் பல தமிழ் மக்கள் பிரிந்து போவதையோ தனி நாடு அமைத்துக் கொள்வதையோ அனுமதிக்கும் நிலையில் இல்லை. ஏனெனில் இந்தியா உற்பட சர்வதேச நாடுகளின் நலன்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் தீனிபோடும் சக்தி தமிழ் மக்களிடம் இல்லை. அத்தகைய நிலையை கட்டி எழுப்பக் கூடிய வல்லமையை தமிழர்தரப்பு கட்டி எழுப்பத் தவறியுள்ளது. தமிழர் தரப்பு அத்தகைய சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளும் இராஜதந்திர நகர்வுகளிலும் கைதேர்ந்தவர்களாக இருந்தபோதும் தமிழ் தலைமைகளிடையே காணப்படும் ஒற்றுமை இன்மை அதற்குத் தடைக் கல்லாக இருக்கின்றது.

• சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை வீழ்த்த எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர்வர்.

சிங்கள ஆட்சியாளர்களைப் பொருத்து தமிழர்களை வீழ்த்த எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர அவர்கள் தயாராக இருக்கின்றனர்.. மறுபுறம் அந்தப் பேய்களிடம் இருந்து எவ்வாறு தப்பிக் கொள்வது என்ற இராஜதந்திர காய் நகர்த்தலிலும் அவர்கள் கைதேர்ந்தவர்கள்.

அதேவேளையில் இந்தியா உற்பட சர்வதேச சக்திகளுக்கு சிங்கள ஆட்சியாளர்களும் பெரும்பான்மை இன சிங்கள மக்களுமே தேவை. அவர்களை முழுமையாகப் பகைத்துக் கொள்ள இந்தச் சக்திகள் விரும்புவதில்லை.

ஆனால் தமிழர் விவகாரம் மற்றும் தமிழர்கள் மீதான மனித உரிமைமீறல்கள் என்பன அந்தச் சக்திகளுக்கு தேவை.தமிழர் விவகாரத்தை வைத்து இலங்கை அரசுக்குக் கடிவாளம் இட்டு தமது நலன் நோக்கிய பாதைக்கு இலங்கை அரசை திசைதிருப்பிக் கொள்கின்றன.

இது இலங்கை அரசுக்கு நன்றாகவேத் தெரியும். எனவேதான் சர்வதேசத்துடன் முரண்படுவதும் திமிறிக் கொண்டு திசைமாறிப்போவதும் பிறகு அடங்கிப் போவதும் காலம் காலமாக நடக்கும் கண்ணாமூச்சி விளையாட்டாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் இலங்கை அரசாங்கம் தமிழர் விவகாரத்தில் எவ்வித சமரசத்திற்கும் தயார் இல்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதுடன் பல்வேறு வழிகளில் இந்தியா உற்பட சர்வதேச சக்திகளுக்கு மிகத் தெளிவாகவே உணர்த்தியும் வருகின்றது.

1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட 13வது மாகாண சபை சட்டத்தை இன்றுவரை முழுமையாக நிறைவேற்றாது இழுத்தடித்து வருவதில் இலங்கை அரசு வெற்றி கண்டு வருகின்றது. இந்தியா கடந்த 36 வருடங்களாக உடன்படிக்கைபற்றியும் 13வது சட்ட திருத்தம்குறித்தும் பேசி வருகின்றபோதும் இதனால் தமிழ் மக்களுக்கு நன்மை விளைந்ததாக ஏதும் இல்லை.

இந்தியாவைப் பொருத்து 1987 உடின்படிக்கையை சாகடிக்காது வைத்திருக்க வேண்டும். அதேவேளையில் தமிழர் விவகாரத்தையும் வீரியத்தடன் வைத்திருக்க வேண்டும் என்பதுதான. இந்த இருவிடயங்களையும் இந்தியா 1987 இல் இருந்து வெற்றிகரமாக கடந்த 36 வருடங்களாக மேற்கொண்டு வருகின்றது.

தமிழ் மக்கள் பெரும் நம்பிக்கை வைத்துள்ள ஐ.நா அதனுடன் இணைந்த மனித உரிமைப்பேரவை தீர்வு காணுமா? என்பதற்குப் பதிலாகக் கூறுவதாயின் இந்த இரு அமைப்புக்களும் தமிழர்களையும் தமிழர் விவகாரத்தையும் வைத்து குரங்கு வித்தை காட்டி வருகின்றது என்பதையே இன்றுவரை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

அமெரிக்கா உற்பட மேற்குலகின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதே ஐ.நா மற்றும் அதனுடன் இணைந்த மனித உரிமைப்பேரவையின் செயற்பாடுகளாகும்.

• தமிழ்த் தலைமைகள் தீர்வினைக் கண்டு விடுவார்களா?

தமிழ்த் தலைமைகள் கனவில் கூட இதனைச் செய்யும் நிலையில் இல்லை. வடக்குக் கிழக்கில் தற்போது களத்தில் நிற்கும் தமிழ்த் தலைமைகளும் தமிழ்க் கட்சிகளும் இன விவகாரத்துக்கான தீர்வுகுறித்த திர்வுப்பொதி இன்றி "தீர்வு" குறித்து பேசிவருகின்றனர். பெரும்பாலான தமிழ்த் தலைமைகளிடம் அர்ப்பணிப்பு இல்லை.

• சட்டத்தரணிகளின் "சட்டத்தரணி அரசியல்".

தமிழர் அரசியலை தொடர்ந்தும் சட்டத்தரணிகளே தமது கைகளுக்குள் வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இந்த சட்டத்தரணிகளின் அரசியல் சிங்களத் தலைவர்களிடம் தோற்றுப் போனதாகவே வரலாராக இருக்கின்றது. இவர்களில் பெரும்பாலானவர்கள் நீதிமன்றங்களில் வெற்றிகரமாக வாதங்கள் புரிந்து வெற்றி ஈட்டியபோதிலும் சிங்களத் தலைமைத்தவங்களின் இராஜதந்திரத்திற்கு முன்னால் தோற்றுப்போய் மண்டியிட்டவர்களாகவே உள்ளனர்.

ஏனெனில் சிங்களத் தலைவர்கள் அரசியலை "அரசியலாக"ச் செய்கின்றனர். தமிழ் சட்டத்தரணிகள் "சட்டத்தரணி அரசியலையே" செய்கின்றனர். அதாவது சட்டத்தரணி போன்று அரசியலையும் தொழிலாகச் செய்கின்றனர். ஒருசிலர் இதற்கு விதிவிலக்காக இருந்தபோதும் அவ்வாறானவர்களை கட்சிகள் ஓரம்கட்டி வைத்துள்ளன.

• ஆறாவது திருத்தச் சட்டம்

6வது திருத்தச் சட்டத்தை மீறி தமிழ்த் தலைமைகளால் செயற்பட முடியாது. அப்படி இருந்தும் இனவிவகாரத்துக்குத் தீர்வு காண்பதாகக் கூறி வாக்கு வேட்டையில் இறங்கி வெற்றி பெற்று நாடாளுமன்ற மாகாண சபை கதிரைகளில் அமர்ந்துவிடுகின்றனர்.

சிறுபான்மைக் கட்சிகள் இலங்கையில் சீனா கால்பதித்தால் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என அக்கறை செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியா பெரிய வல்லரசு. தனது பாதுகாப்பை இந்தியாவுக்குப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியும். தமிழ்த் தலைமைகளும் தமிழ் கட்சிகளும் இந்தியப் பாதகாப்பில் அக்கறை செலுத்துவதைவிடுத்து தமிழர் விவகாரத்துக்கான தீர்வு நோக்கி கவனம் செலுத்துவதே சிறந்தது.

சீனப் புரட்சிக்காகவும் கியூபாப் புரட்சிக்காகவும் போர்க் கொடி தூக்கி தமிழர்கள் வீதியில் இறங்கிய காலம் ஒன்று இருந்தது. தற்போது அந்த நாடுகள் தமிழ் மக்களுக்காக நிற்கின்றனவா? முள்ளி வாய்க்காலில் தமிழ் மக்களைக் கொன்றொழிக்க துணை நின்றதை ஏனோ தமிழ்த் தலைமைகளும் தமிழ்க் கட்சிகளும் மறந்து நிற்கின்றன. அவர்களின் பூலோக அரசியல் நிகழ்ச்சி நிரழ்களுக்குள் தமிழர் விவகாரம் பகடைக்காயாக உருண்டு கொண்டிருக்கின்றது.

புவிசார் அரசியலைத் தமக்குச் சார்பாக ஆக்கிக் கொள்ளும் நிலையில் திறன் பெற்றதாக தமிழ்த் தலைமைகளோ புலம்பெயர் அமைப்புக்களோ இல்லை என்பதும் இலங்கையின் ஆளும் வர்க்கத்திற்குத் தெரியும். அதேவேளையில் தமிழ்த் தலைமைகளிடமும் புலம்பெயர் அமைப்பக்களிடமும் நிலவுகின்ற ஒற்றுமை இன்மை இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு சாதகமான விடயமாக உள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழர் அரசியலில் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இலங்கை அரசு சமஷ்டி தீர்வுவரை கீழிறங்கி வந்தது.தற்போது அவ்வாறான ஒரு சக்திமிக்க அமைப்பு தமிழர்களிடையே இல்லை என்பதும் இலங்கை அரசுக்குச் சாதகமான விடயமாகும்.

(தொடர்ச்சி 21 பக்கம்)

# யாழ் உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்து அட்டூழியம் புரிந்த மதபோதகர் கைது

- நடராசா லோகதயாளன்


உதயன்
போதகர் தலைமையில்
'உதயன்' அலுவலகத்துக்குள் புகுந்து மதக்குழுவொன்று பெரும் அட்டூழியம்!

யாழ்ப்பாணம் உதயன் பத்திரிகை தலைமையகத்துக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (9) அன்று அத்துமீறி நுழைந்து சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட மதபோதகர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூரில் நடைபெற்ற சம்பவம் தொடர்பான செய்தி ஒன்றை வெளியிட்டமைக்காகவே உதயன் பத்திரிகை ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கிறிஸ்தவ சபை ஒன்றின் போதகர் தலைமையில் வந்த சுமார் 30 பேர் கொண்ட கும்பலே இதில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரால் தீவிர விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே அந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடு புகுந்து தாக்குதல்

அச்சுவேலியில் உள்ள "அசெம்ளி ஒ.்.ப் ஜீவ வார்த்தை" என்ற கிறிஸ்தவ ஜெபகூடத்தில் அதிக ஒலி எழுப்பப்பட்டமையால் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து மதக்குழுவின் போதகர் உட்பட மூவர் சபைக்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்களை கழுத்தை நெரித்துத் தாக்கினர் என்ற முறைப்பாட்டுக்கு அமைய கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். பாதிப்புக்குள்ளான பெண் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளார்.

ஆனால் தமது சபை மீது கற்கள் வீசப்பட்டமையாலேயே அந்த வீட்டுக்குச் சென்றோம் என்று போதகரும், ஏனைய இருவரும் பொலிஸ் விசாரணையில் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான செய்தி ஞாயிறு காலையில் உதயன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இதையடுத்து அன்று மதியம் உதயன் பத்திரிகை தலைமையகத்துக்கு சுமார் 30 பேரைக் கொண்ட கும்பல் வாகனங்களில் வந்திறங்கியது. அலுவலக பாதுகாப்பு உத்தியோகத்தரை மீறி அந்தக் கும்பல் வரவேற்பறைக்குள் அத்துமீறி நுழைந்து "போதகரைப் பற்றி எப்படிச் செய்தி போடுவீர்கள்?" "யார் இந்தச் செய்தியைத் தந்தார்கள்?" என்று சத்தமிட்டு, தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து, அநாகரிகமாக நடந்து கொண்டதுடன், அங்கு பணியில் இருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.



இது தொடர்பாக ஆசிரியர் பீடத்துக்கு அறிவிக்கப்பட்டு ஆசிரிய பீடத்தினர் வரும் முன்னர் அலுவலக வாயிலை மறைத்து, எவரும் உள்ளே செல்லமுடியாத வகையில் தரையில் அமர்ந்து அவர்கள் மறியல் செய்தனர்.

உதயன் ஆசிரியர் பீடப் பணியாளர்கள் இருவர் தீர்வொன்றைக் காணும் வகையில் அவர்களுடன் கலந்துரையாட முற்பட்டனர். ஆனால் அதற்கு அந்தக் கும்பல் இணங்கவில்லை.

"போதகர் தொடர்பாக வெளியான செய்தியை எவ்வாறு வெளியிடுவீர்கள்?" என்று கேட்டு அந்தக் கும்பல் ஆசிரிய பீடப் பணியாளர்களைச் சுற்றிவளைத்து அச்சுறுத்தும் வகையிலும் செயற்பட்டது.

"போதகரும் ஏனைய இருவரும் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதுவே உரிய ஆதாரங்களோடு செய்தியாக்கப்பட்டுள்ளது" என்று அவர்களிற்கு விளக்கப்பட்டது.

"செய்தியில் தவறு ஏதேனும் இருக்குமானால் அது தொடர்பான ஆதாரங்களையும் விளக்கையும் சமர்ப்பித்தால், உரிய வகையில் அதை ஆராய்ந்து முடிவெடுப்போம். அவ்வாறில்லாவிட்டால் சட்டரீதியாக இந்தவிடயத்தை அணுகுங்கள்" என்று பக்குவமாக ஆசிரியபீடத்தினரால் அவர்களுக்கு கூறப்பட்டது. ஆனால் அவர்கள் தொடர்ந்து கூச்சல், குழப்பங்களில் ஈடுபட்டனர் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் கூறுகின்றனர்.

உதயன் பத்திரிகை நிறுவனப் பணியாளர்களை அந்தக் கும்பலைச் சேர்ந்தோர் அனுமதியின்றி, கைத்தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்ததுடன், காணொலிப் பதிவும் மேற்கொண்டனர்.

மறைந்திருந்த போதகர்

"இந்த விடயத்துடன் நேரடியாகத் தொடர்புடைய எவரேனும் இருந்தால் முன்வந்து பேசுங்கள்" என்று உதயன் ஆசிரிய பீடத்தினர் கோரியபோது எவரும் முன்வரவில்லை. நீண்ட நேரத்தின் பிறகு ஒருவர் "தானே அந்தப் போதகர்" என்று வெளிவந்தார். "ஏனையோரை வெளியே அனுப்பிவிட்டு உங்களின் பிரச்சினை தொடர்பில் நீங்கள் பேசுங்கள்" என்று கேட்டபோது, "என் மீதுள்ள விசுவாசத்தில் அவர்கள் கதைக்கின்றார்கள்" என்று கூறிய போதகர், உதயன் ஆசிரியர் பீடத்தினருடன் பேசுவதை தவிர்த்தார்.

தாக்க முயற்சி

ஒருகட்டத்தில் அந்தக் குழு ஆசிரியர் பீடப் பணியாளர்களைச் சுற்றிவளைத்து அவர்களைத் தாக்கும் வகையில் செயற்பட ஆரம்பித்தது. அதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு வருவதை அவதானித்த அவர்கள் அங்கிருந்து நழுவத்தொடங்கினர். இறுதிவரையில் உதயனில் வெளியான செய்தியில் தவறு உள்ளதா? என்பது தொடர்பில் அவர்கள் எதுவும் கூறவில்லை.



போதகரின் பின்னணி

"அசெம்ளி ஒ.்.ப் ஜீவ வார்த்தை" என்ற இந்த மதச்சபையின் போதகர் ஆரம்பத்தில் இன்னொரு சபையின் போதகராகவே இருந்தார். ஆயினும் அந்தச் சபையினர் குறித்த போதகரை இடைநிறுத்தியதால், தனியாக "அசெம்ளி ஒ.்.ப் ஜீவ வார்த்தை" என்ற பெயரில் மதக்குழுவை தொடங்கி நடத்தி வருகிறார். இந்தச் சபைக்கு சொந்தமான தேவாலயம், பொதுக்காணியொன்றை அடாத்தாகப் பிடித்தே அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குவியும் கண்டனங்கள்

கிறிஸ்தவ புனிதநாளான உயிர்த்த ஞாயிறு தினத்தில் குறித்த மதச்சபை மிலேச்சத்தனமாக நடந்து கொண்டமைக்கும், ஊடக நிறுவனத்துக்குள் அத்துமீறி, அச்சுறுத்தி நிகழ்த்திய அட்டூழியத்துக்கும் பல தரப்புகளும் தங்கள் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

போதகர் ஒருவர் தலைமையிலான மதக்கும்பல் ஒன்று உதயன் பத்திரிகை தலைமையகத்துக்குள் புகுந்து அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில் உதயன் நிர்வாக இயக்குநர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ ின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் கவனத்திற்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இந்த விடயம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படுமென்றும் ஜனாதிபதி செயலர் சமன் எக்கநாயக்கவால், உதயன் நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

உதயனுக்குள் புகுந்த மதக்குழு தொடர்பில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வன்முறையைத் தூண்டுவோரை, சட்டங்களை அப்பட்டமாக மீறுவோரைத் தளையிட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

முந்தையநாள் கோப்பாயில் சிறுமிகள் மீது பாலியல் வன்முறை செய்த குற்றச்சாட்டின் கீழ் பாதிரி ஒருவர் தேடப்படுகின்றார். அச்சுவேலியில் அடுத்த வீட்டு அணங்கின் தலையில் கல் வீசிக் கடுங் காயம் ஏற்படுத்திய போதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மை காலங்களில் சைவ மக்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடைபெறுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உதயன் பத்திரிகை அலுவலகத்தை முற்றுகையிட்டு ஊழியர்கள் மேல் தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டதை உருத்திர சேனை வன்மையாக கண்டிக்கின்றது. தாக்குதல் முயற்சியானது ஊடக சுதந்திரத்தின் மேல் தொடுக்கப்பட்ட போர் ஆகு என்று அந்த அமைப்பின் தலைவர் ஆர். சுஜீவன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறியுள்ளார்.

# வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழர்கள் எதிர்கொள்ளும் சமகால பிரச்சனைகளை எதிர்க்க பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்

இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்குமான பொதுக்கட்டமைப்பு ஒன்று வுனியாவில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் அரசாங்கத்தின் நெருக்கடிகள் மற்றும், பௌத்தமயமாக்கல் போன்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் வவுனியாவிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த விடயங்கள் தொடர்பாக தமிழர்களின் நலன்களைப் பாதுகாத்து உரிமைகளை பெற்றிட இரு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், வனவளத்திணைக்களத்தால் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை, தொல்பொருள்திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பான தரவுகளை சேகரித்து அவற்றை துல்லியமாக இனம் காண்பதற்காக 7 பேர் கொண்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அதற்கு இணையாக அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் சாத்வீகப்போராட்டத்தை முன்னெடுப்பதற்காக மற்றொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.


இந்தக் கூட்டத்தில், ஒருசிலர் இந்துசமயம் மீது மாத்திரமே தற்போது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதாகவும், வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் தாக்கப்பட்டபோது குரல்கொடுப்பவர்கள் திருக்கேதீஸ்வரத்தில் வளைவு உடைக்கப்பட்டபோது அமைதியாக இருந்ததாகவும் கருத்துக்களை முன்வைத்தனர். இதனால் சற்றுநேரம் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டு, பின்னர் சுமுகமானது. இதேவேளை குறித்த கலந்துரையாடலுக்கு வடக்கு, கிழக்கு சங்கநாயக்கரான விமலசார தேரரும் வருகை தந்திருந்தார்.

நீதிமன்றில் வழக்கு இருக்கும் நிலையில் குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக அவருக்கு தெரிவிக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த அவர், தமக்கே தெரியாமல் சில விடயங்கள் நடந்துவிடுவதாகவும், ஏற்கனவே இருந்த பழைய ஆலயங்கள் புதுப்பிக்கப்படாமல் அப்படியே பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மதகுருமார்கள், தமிழ் அரசுக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிசகட்சி, தமிழர் விடுதலைகூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகளும், பொது அமைப்பினரும் கலந்துகொண்டனர்.


HAPPY TAMIL NEW YEAR
இனிய
தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave. E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040 | raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca
Ontario

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்:
**15-03-1938**

மறைவு:
**16-03-2023**

# திரு. வைரமுத்து விநாயகமூர்த்தி

**(கோண்டாவில் கிழக்கு மற்றும் நவக்கிரி)**

*அன்பினை அள்ளித் தந்த அருமையான பெற்றோருக்கு புதல்வராய் பிறந்து*
*அருகினில் சேர்ந்து விளையாடி மகிழ்ந்த சகோதரங்களோடு வளர்ந்து*
*என்பும் தசையும் போல் மணவாழ்க்கையின் பின் துணைவியை நேசித்து*
*எல்லயில்லா மகிழ்ச்சியினை பெற்றெடுத்த நற் பிள்ளைகளிடமிருந்து பெற்றீர்*

*மண்ணையும் மழையையும் நம்பி வாழ்ந்த தொழிலைத் தெய்வமாய் மதித்து*
*மனதினில் உறுதியொடு வெய்யிலில் உடலை வருத்தி பொருள் சேர்த்து*
*நன்மை பல தரவல்ல கல்வியினை பிள்ளைகள் பெற்றிட அனைத்தையும் ஆற்றி*
*நல்ல இடங்களில் அவர்கள் சென்றமர்ந்து பதவிகள் பல பெற்றதை கண்டீர்*

*இன்முகம் காட்டி அவர்களை ஊக்குவித்து பின்னர் உற்ற துணைகளைத் தேடி*
*இசைந்தே எம்முடன் வாழ்ந்த உயர்ந்தவரே உங்கள் பிரிவு எம்மை ஊன்றித் தாக்கியது*
*தங்கள் இழப்பினால் அனைவருமே சந்தோசம் இழந்தோம் நாம் மட்டுமல்ல வரிசையாய்*
*தவழும் குழந்தை முதல் உலகறியும் வயதுடைய பேரப்பிள்ளைகளும் கதறி நின்றனர்*

*உங்களைச் சுற்றி வந்த உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் என*
*அனைவருமே ஆழ்ந்த கவலையில் தான். அழுதபடி வந்து எமது ஆறுதல் கூறுகின்றார்*
*சிங்கத்தை போல தைரியம் கொண்டவராய் திகழ்ந்து எம் குடும்பம் காத்தீர் ஐயா!*
*சினங்கொள்ள மாட்டாத சிந்தையை உடையவராய் இறுதிவரை எம்முடன் இருந்தீரே!*

*பொங்கியெழுந்து விடுதலைப்போர் செய்து வீரமரணம் எய்த புதல்வரது வித்துடல் கண்டு*
*பதட்டமின்றி மார் தட்டி நின்று அதன் மீது கைகளால் மண் துவிய தீரத் தந்தை நீங்கள்*
*மங்கியது எங்கள் மனதின் எழுச்சி நீங்கள் மறைந்த நாட் தொடக்கம் மறப்போமா உமை!*
*மனது குளிர தினமும் எம் கனவுகளில் வந்து காட்சி தாருங்கள் ஐயா அதுவே போதும் எமக்கு!*

யாழ். கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், நவக்கிரி, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புக்குரிய வைரமுத்து விநாயகமூர்த்தி அவர்கள் 16-03-2023 வியாழக்கிழமை அன்று காலமானார் என்ற செய்தியைக் கேள்வியுற்று நேரிலும் தொலைபேசி மூலமாகவும் எம் இல்லங்களுக்கு வருகை தந்து ஆறுதல் வார்த்தைகளை பகிர்ந்து சென்றவர்களுக்கும் பின்னர் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர்வளையங்களை அனுப்பிவைத்தவர்களுக்கும் உணவு மற்றும் உபசாரங்களை செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 15-04-2023 சனிக்கிழமையன்று பகல் 11.00 மணி தொடக்கம் 733 Birchmount Road, Scarborough, ON M1K 1R5 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள எமது அன்புக்குரியவரின் நினைவஞ்சலிப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் பங்கெடுத்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.!

---

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு: நிமால் (மகன் - கனடா): (416) 888-1128
சாந்தி (மகள் - கனடா): (647) 289-6545
வசந்த் (மகன் - கனடா): (647) 885-3012

# மரண அறிவித்தல்

மலர்வு: 08 - 04 - 1934

உதிர்வு: 10 - 04 - 2023



# அமரத்துவமாது மகேஸ்வரி தியாகராஜா

(யாழ்ப்பாணம், கொட்டடி சீனிவாசகம் வீதி)

**தொல்புரத்தை பூர்வீகமாகவும், யாழ்ப்பாணம், கொட்டடி சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும், கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரத்தவமாது மகேஸ்வரி தியாகராஜா அவர்கள் 10-04-20023 (சித்திரை) அன்று இறைபதம் எய்தினார்.**

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஒரே மகளும், காலஞ்சென்ற சீனிவாசகம் - கண்மணி தம்பதிகளின் ஆசை மருமகளும்,

காலஞ்சென்ற சீனிவாசகம் - தியாகராஜா (முன்னாள் பதிவாளர் - யாழ் கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்ற இராசரத்தினம், நவரத்தினம், சின்னத்துரை ஆகியோரின் அருமைச் சகோதரியும்,

காலஞ்சென்ற ராசாத்தி, ஜெயலக்ஷ்மி, ராசசெல்வமணி ஆகியோரை சகோதர வழி மைத்துனிகளாகவும், காலஞ்சென்ற நாகலகஷ்மி, இரத்தினாம்பிகை, ஜெயலக்ஷ்மி ஆகியோரை திருமண வழி மைத்துனிகளாகவும், காலஞ்சென்ற சீனிவாசகம் நடராஜாவை மைத்துனராக கொண்டவராகவும்,

சீனிவாசகம் (இலண்டன்), நளாயினி (அவுஸ்திரேலியா), கமலாயினி (இலண்டன்), ராகினி (கனடா) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், சத்தியா (இலண்டன்), பிரகலாதன் (பிரபா, அவுஸ்திரேலியா), அமரநாத் (ராசா, இலண்டன்), சிவக்குமார் (ராஜவர்மன், கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

லக்ஷனா, விசாகன் (இலண்டன்), தனுலக்ஷமி - ராஜ்குமார் (அவஸ்திரேலியா), தனுராஜ் (நியூசலான்ட்), மயூரன் (இலண்டன்), யுகாந்தகி (இலண்டன்), ஷரிணி (கனடா) ஆகியோரின் அருமைப்பேத்தியும்,

தருண், தரணா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் ஆசைப்பூட்டியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் 384 Finley Avenue Ajax இல் அமைந்திருக்கும் Ajax Crematorium & Visitation Centre இல் *22-04-2022* சனிக்கிழமை மாலை *5:00* மணி தொடக்கம் *9:00* மணி வரையும், மறுநாள் *23-04-2023* ஞாயிற்றுக்கிழமை காலை *9:00* மணி தொடக்கம் *10:30* வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று, மதியம் *12:00* மணிக்கு அதே முகவரியில் தகனம் செய்யப்படும்.**

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

“புகழ் பூத்த யாழ்ப்பாணப் பெருநகரின், கொட்டடிப் பகுதிதனில் கோலோச்சிய சீரிய சீனிவாசகம் பரம்பரையின்
அதிமூத்த தீபம் அணைந்ததுவோ!
வந்தாரை வரவேற்று, வயிறார அமுது படைத்த
வளைக்கரம் ஓய்ந்ததுவோ. என்றென்றும் அழகொளிரும் இனிய வதனம்-தன் புன்னகையை இழந்ததுவோ!
எண்பத்தியொன்பதாவது அகவையில், எட்டாத தொலைவு சென்றதுவோ”

தொடர்புகளுக்கு: ராகினி (Canada): (416) 551-8007
சிவக்குமார் (ராஜவர்மன்) (Canada): (647) 719 8007 | சீனிவாசகம் (U.K): 44 775 7445242
அமரநாத் (ராசா) (U.K): 44 795 1166685 | பிரகலாதன் (பிரபா) (Australia): 61 409 783725


HAPPY
TAMIL NEW YEAR
2023
இனிய தமிழ்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
Hon. Mary Ng, MP
Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-8100 | Mary.Ng@parl.gc.ca
maryngmp.ca | @maryngMarkhamThornhill
@Mary_Ng | @Mary_Ng


MILA
AT MIDLAND AVE & LAWRENCE AVE E, SCARBOROUGH
UNITS IN HAND ACT NOW BEFORE SOLD OUT
FREEHOLD TOWNS FROM ONLY $1.29M | SINGLE DETACHED FROM ONLY $1.76M
ஸ்காபுறோ நகரின் மையப்பகுதியில் Lawrence Avenue East & Midland Avenue சந்திப்புக்கு அருகில்
உங்களுக்கான அழகிய இல்லங்களை விரைவில் பெற்றுக்கொள்ளுங்கள்
FREEHOLD TOWN இல்லம் ஒன்றின் ஆரம்ப விலை $1.29 மில்லியன் | தனியான இல்லம் ஒன்றின் ஆரம்ப விலை $1.76 மில்லியன்
EXTENDED DEPOSIT STRUCTURE:
• TOTAL $150,000 FOR TOWNHOMES
• TOTAL $180,000 FOR DETACHED HOMES
CAPPED DEVELOPMENT CHARGES
• $8,000 PLUS HST FOR TOWNHOMES
• $10,000 PLUS HST FOR DETACHED HOMES
ASSIGNMENT AVAILABLE*
$10,000 DECOR CREDIT FOR DETACHED HOMES
$5,000 DECOR CREDIT & KITHEN APPLIANCE PACKAGE FOR TOWNHOMES
ஒவ்வொரு இல்லத்தையும் வாங்கும்போது 1 அவுன்ஸ் தங்கக் கட்டி பரிசாக வழங்கப்படும்
KESHAV GOYAL. BROKER OF RECORD
CONTACT SALES : 647-901-3800 | 647-262-9264
SALES@MILATOWNSVIPACCESS.CA
LOMBARD
GROUP REAL ESTATE INC., BROKERAGE


NEW FREEHOLD SEMIS & DETACHED HOMES NEAR NIAGARA FALLS
SIDE ENTRANCE AVAILABLE + FREE ASSIGNMENT & EASY DEPOSIT
BOOK WITH ONLY $5000!
• 30' SEMI-DETACHED FROM $744,900
• 40' DETACHED FROM $899,900
• 45' DETACHED FROM $965,900
EXTENDED 10% DEPOSIT IN 14 MONTHS
LATE CLOSING OF 2024
FREE ASSIGNMENT
✓ MINUTES FROM HIGHWAY 406 & HIGHWAY 20
✓ CLOSE TO WELLAND, NIAGARA FALLS
✓ 4 MINUTES FROM NIAGARA COLLEGE
GET 1 OZ GOLD BAR ON EVERY PURCHASE*
KESHAV GOYAL, BROKER OF RECORD
CONTACT SALES : 647-901-3800
LOMBARD
GROUP REAL ESTATE INC., BROKERAGE

# 'குரங்கு வர்த்தகத்தில்' இறங்கும் இலங்கை அரசு! ஆனால் பலன் யாருக்கு?

- நடராசா லோகதயாளன்



இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்து நெருக்கடியாக உள்ள நிலையில் அரசு அதிலிருந்து மீள்வதற்கு எதையும் செய்ய தயாராக இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது. எப்படியாவது நாட்டிற்குள் டொலர்கள் வந்தால் சரி என்று அரசு நினைப்பதை அதன் "புதிய சிந்தனையிலிருந்து" தெரிந்து கொள்ளலாம்.

தேயிலை, ஆயத்த ஆடைகள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மூலம் தனக்கென்று ஒரு இடத்தைப் பெற்ற இலங்கை இப்போது குரங்குகளை ஏற்றுமதி செய்து புதியதோர் வர்த்தகப் பாதையை திறக்கவுள்ளது.

நாட்டில் தொடர்ச்சியாக குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதும், அவை விவசாயத்திற்கு பெரும் பாதகங்களை ஏற்படுத்தி வருவதும் அனைவரும் அறிந்ததே. அதற்கு அப்பாற்பட்டு வயல்கள், காடுகள், தோப்புகள், தோட்டங்கள் ஆகிய இடங்களில் பணியாற்றுபவர்கள் குரங்குக்கடிகளிற்கும் ஆளாகின்றனர்.

அதேவேளை, இலங்கையின் நெருங்கிய கூட்டாளியாக இருக்கும் சீனா தமது நாட்டின் தேவைகளிற்கு இலங்கையிலிருந்து குரங்குகளை இறக்குமதி செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளது. தமது நாட்டில் மிருகக்காட்சிசாலைகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும், அதற்காகவே இந்த குரங்குகள் அங்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும் சீன தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால், இந்த குரங்கு வர்த்தக திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கபடும் நன்மைகள் குறித்து பல கேள்விகள் எழுந்துள்ளன.

முதற்கட்டமாக இலங்கையில் இருந்து ஒரு லட்சம் குரங்குகளை சீனாவிற்கு வழங்குவதற்கான உரையாடல் இடம்பெற்றுள்ளது.

விவசாயம் மற்றும் பொதுமக்களிற்கு குரங்குகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கவே குரங்கு ஏற்றுமதி நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அந்த கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அதனால் நாட்டில் பெருந்தொகையில் காணப்படும் குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்று அரசு நம்புகிறது.

விசேட கலந்துரையாடலின் படி இலங்கை குரங்குகளை வெளிநாட்டுக்கு வழங்குவது தொடர்பான சட்ட நிலைமைகளை ஆராய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இக்குழு குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்யப் பரிந்துரை செய்தால் குரங்குகள் சீனாவிற்கு அனுப்பி வைக்கப்படும். அந்த அனுமதி விரைவில் கிடைக்கும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேநேரம் இலங்கையின் 25 மாவட்டங்களில் இன்று 21 மாவட்டங்களில் குரங்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக தொடர்ச்சியாக முறையிடப்படுவதோடு வடக்கு கிழக்கின் 8 மாவட்டமும் முழுமையாக குரங்குகளின் தாக்குதலினால் பெரும் இழப்பைச் சந்திப்பது வருடாந்த தரவுகள் மற்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிலம் மற்றும் கடல் சீனாவிற்கு வழங்கிய நிலையில் தற்போது இலங்கையில் இருந்து குரங்குகளும் சீனாவிற்கு ஏற்றுமதியாகவுள்ளது. டொலரை ஈட்ட கடல் அட்டை பண்ணை அமைத்தது போன்று எதிர்காலத்தில் குரங்கு பண்ணையும. அமைக்கப்படலாம் என்ற கருத்தும் கூறப்படுகிறது.



அதோடு இலங்கை அரசு சீனாவிடம் பெற்ற கடனை அடைப்பதற்கு குரங்குடன் தெரு நாய்களையும் ஏற்றும் நிலையும் ஏற்படலாம் அதற்கும் பண்ணைகள் அமைக்க எமது அமைச்சர்கள் திட்டம் தயாரிப்பார்கள் அதனால் அந்நியச் செலவாணி ஈட்டப்படுவதாகவே கூறுவர் என்று மக்கள் இப்போதே பகடியாகப் பேசத் தொடங்கிவிட்டனர்.

அதேவேளை இன்று இலங்கை முழுவதும் விவசாயிகளிற்கு பெரும் பிரச்சனைகளில் குரங்கு, மயில், யானை மற்றும் தெரு நாய்களின் பிரச்சனையும் பிரதான பங்கை வகிப்பதனால் குரங்கு மற்றும் நாய் எனபவற்றை ஏற்றுமதி செய்வதனை பலரும் ஆதரித்து ஏற்றுக்கொள்ளும் நிலையே காணப்படுன்றது.

உண்மையில் இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு மட்டுமன்றி பொலன்றுவை, மொனறாகலை, புத்தளம் மாவட்டங்களில் இந்த குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளன, ஏனைய மாவட்டங்களிலும் இந்த நிலை ஏற்படவே குரங்கு, மயில் போன்றவற்றை சுடுவதற்கு அனுமதிக்கும் முடிவிற்கு அரசு சென்றது. இருந்தபோதும் அவற்றை சுட்டுக்கொல்லாது இன்னுமோர் இடத்திற்கு அனுப்புவதை பலரும் வரவேற்கின்றனர். மிதமிஞ்சிய பொருளால் வருமானத்தை ஈட்டுவதில் தவறும் கிடையாது என்றும் வாதிடப்படுகிறது.

குரங்குகள் தென்னை, முருங்கை, பப்பாசி முதல் விவசாய நடவடிக்கைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தியதோடு குடியிருப்புக்களை அழித்து சிறுவர்களின் உயிர்களிற்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன. இதேநேரம் வயல்களில் யானையால் ஏற்படும் சேதங்களிற்கு வழங்கப்படும் இழப்பீடு குரங்கினால் ஏற்பட்டால் கிடையாது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி இரணைமடு விவசாயிகள் சம்மேளணத்தின் செயலாளர் மு.சிவமோகனிடம் பேசினேன்.

"குரங்கினால் பெரும் சேதங்களை சந்திப்பவர்கள் விவசாயிகள்தான், சிறுதாணிய உற்பத்தி இன்று கைவிடப்படுவதற்கு மிக முக்கியமாக குரங்கு, மயில் மற்றும் பன்றிகளே காரணமாக உள்ளன. இதேநேரம் தென்னையின் அழிவும் பாரிய அளவில் காணப்படுகின்றது. சீனாவிற்கு ஒரு லட்சம் குரங்குகள் என்பது மிகச் சொற்பமானது. முடிந்தால் 10 லட்சம் குரங்குகளையேனும் ஏற்றுமதி செய்தால் அவையும் (குரங்குகளும்) உயிர்வாழும் நாமும் உயிர்வாழும் நிலை ஏற்படும். அரசு இதற்கு காலத்தை இழுத்தடிக்காமல் உடனடியாக செயலில் இறங்க வேண்டும்".

இதேநேரம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் விலங்கியல் பேராசிரியர் த.ஈஸ்வரமோகனை தொடர்பு கொண்டு கேட்டபோது, "இராணுவம், மக்கள், பெரும் முதலாளிகள் காடுகளை அழித்தமையினால் மக்கள் வாழ்விடங்களிற்குள் வந்த குரங்குகள் மீளச்செல்வது குறைவு. குறிப்பாக கிளிநொச்சியின் கரையோரங்களில் யுத்தம் இடம்பெற்றபோது சாவகச்சேரியிலும் மக்கள் இல்லாத காரணத்தால் குரங்குகள் அதிகளவில் ஊடுருவிது. அவை இன்று பெருகியுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஊருக்குள் வந்த குரங்கை பிடித்து காடுகளிலேயே விடும் சட்டமே இதுவரை காணப்பட்டது. ஒரு சில விலங்குகள் எனில் அது பொருத்தமான செயல்பாடு. இன்று எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதனால் அதனை மேற்கொள்ளவும் பொருளாதார நெருக்கடியும் காணப்படும். நாட்டிற்குள் ஆடு, மாடு, கோழி தேவையெனில் இறக்குமதி செய்யும்போது குரங்கினை சீனா இறக்கவும் இலங்கை ஏற்றுமதி செய்யவும் தீர்மானித்தால் அதில் தவறு கிடையாது".

சீனா உண்மையில் பல புதிய, புதிய நகரங்களை உருவாக்குவதோடு பல பூங்காவையும் உருவாக்குவதாகவே தரவுகள் கூறுகின்றன. குரங்கினால் இலங்கை விவசாயிகள் படும் பாடு உண்மையில் கட்டுப்படுத்த முடியவில்லை என்று மேலும் கூறினார்.

"நகரின் மத்தியில்இருப்போர் காருண்யம், மனிதாபிமானம் என எதிர்க்கவும் கூடும் ஆனால் மாங்காய், தேங்காய், முருங்கையில் இருந்து இந்த குரங்குகளினால் அழிவையும் இழப்பையும் சந்திப்பவர்களே இதன் கருத்தைக்கூற 100 வீத உரிமை கொண்டவராக காணப்படுவார். குரங்கை ஏற்றுமதி எனப் பார்க்க வேண்டும் அது சீனாவிற்கு ஏற்றுமதியா எந்த நாட்டிற்கு ஏற்றுமதி என்பதற்கு அப்பால் அதனை ஏற்றலாமா ஏற்றக்கூடாதா எனப் பார்த்தால் ஏற்றுவதன் மூலமே தற்போது அதிக நன்மை பயக்கும் விடயமாகவே காணப்படுகின்றது".



1960ஆம் ஆண்டளவில் நாட்டின் தேவை கருதியும் சும்மா இருந்த நீர் நிலைகளில் தண்ணீர் பயன்பாட்டிற்கு அப்பால் அங்கே வேறு இலாபமும் அடைவதோடு நுளம்பு பெருக்கத்தையும் கட்டுப்படுத்த யப்பான் மீன் எனப்படும் திலாப்பியா வகை மீன் யப்பானில் அன்று அதிகமாக இருந்தபோது எமக்கு தேவை என்பதனால் கொண்டு வந்தனர் அது உலக நியதியும் ஆகும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பரந்துபட்டளவில் இதற்கு ஆதரவு இருப்பதாவே தெரிகிறது. பாண்டியன்குளத்தைச் சேர்ந்த இளங்கோ கருத்து தெரிவிக்கையில் எமது பகுதி அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் தடையாக இருக்கும் குரங்கினை ஏற்றுமதி செய்வதென்பது "நாட்டின் பொருளாதாரத்தை ஈட்ட மனிதரால் முடியாமல்போக மிருகங்களை வைத்து ஈட்ட முயற்சிக்கப்படுகின்றது" குரங்கை ஏற்றுமதி செய்வதனால் அந்த இனம் முழுமையாக அழிவடையும் என நம்பவில்லை. இதனால் ஓரளவேனும் கட்டுப்பட்டால் எமக்கு மகிழ்ச்சிதான் என்றார்.


யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் தலைவர் க. தியாகலிங்கமும் இதில் உடன்படுகிறார்.

"விவசாய அமைச்சரிடம் நாம் இதனை பல தடவை கோரினோம். அதாவது குரங்கு, மயில், பன்றிகளால் விவசாயிகளான நாம் படும் சிரமத்தை பல தடவை கோரினோம் இதனால் ஏற்பட்ட பாதிப்பு யாழில் மட்டும் பயித்தை, தென்னை, நெல் அழிவு வருடாந்தம் 90 ஆயிரம் தேங்காயை யாழ்ப்பாணத்தில் இழக்கின்றோம். இதில் தென்மராட்சியே அதிகம் பாதிக்கின்றது இங்கே வருடாந்தம் 90 ஆயிரம் தேங்காயை யாழ்ப்பாணம் இழக்கின்றது எனில் நாடு பூராகவும் எவ்வளவு இழக்கப்படும். இதேபோன்று வடக்கில் வருடாந்தம் சுமார் 15 ஆயிரம் கிலோ முருங்கை, 5 ஆயிரம் கிலோ பயிற்றையை இந்த குரங்குகள் நாசமாக்கின்றது. இவ்வாறு குரங்குகளை சீனாவிற்கு ஏற்றினால் விவசாயிகளிற்கு அரசு செய்த முதலாவது பெரிய நன்மைக் காரியமாக அமையும். குரக்கன், சாமி, தினை போன்றவை பயிரிடுவது குறைந்தமைக்கும் குரங்கே காரணம்" என்றார்.

இவ்வாறு குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்யவுள்ளதாக அரசு அறிவித்திருப்பது தொடர்பில் நெடுங்கேணி விவசாய அமைப்பின் தலைவர் வை. பூபாலசிங்கத்தையும் கேட்டேன்:

"இந்த உலகம் மனிதனிற்கு மட்டும் சொந்தமானது அல்ல. மிருகங்களிற்கும் சொந்தமானதுதான். இருப்பினும் எதிலும் ஓர் சமநிலை வேண்டும். இங்கே எம்மை பொறுத்தமட்டில் யுத்தம் காரணமாக அதிகமானோர் உயிரிழந்தோம். அதனால் மேலும் பல லட்சம்பேர் இடம்பெயர்வினால் மனிதர்களின் எண்ணிக்கை குறைவடைய மிருகங்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது இதன் காரணமாக குரங்கு மட்டுமல்லை யானைகளையும் ஏற்றுமதி செய்யலாம். அது சீனாவிற்கு வழங்கப்படுகின்றதா அல்லது சீயன்னாவிற்கு வழங்கப்படுகின்றதா என்பது எமக்கு முக்கியம் அல்ல. ஏனெனில் யானை வாழ்நாளில் 15 ஏக்கர் காட்டை உருவாக்கும் உங்களால் முடியுமா எனக் கேள்வி எழுப்புபவர்கள் எமது பிரதேசத்தில் ஒரு மாதம் வந்து வாழ்ந்து பார்க்க வேண்டும். அரசு மேற்கொள்ளும் தவறை சுட்டிக்காட்டும் நாம் சரியானதை வரவேற்போம் அதாவது எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என்பது கிடையாது. எனவே அரசு ஒரு லட்சம் குரங்குகள் அல்ல 5 லட்சம் குரங்குகளும் வழங்கலாம் என்றார்.

எனினும் குரங்குகள் சீனாவின் மிருகக்காட்சிசாலைகளிற்கு என்று கூறப்பட்டு ஆராய்ச்சி, இறைச்சி போன்ற இதர தேவைகளிற்கு பயன்படுத்தப்படுமா என்ற கேள்வி எழாமல் இல்லை. அதே போன்று இந்த குரங்குகள் மிகக்குறுகிய காலத்தில் சீனாவில் பல்கிப் பெருகினால் என்ன செய்வார்கள் என்பதற்கான பதில் இதுவரை இல்லை.



ஆனால் குரங்கு ஏற்றுமதிக்கு பரவலான ஆதரவு இலங்கையில் உள்ளது. இந்தக் கட்டுரைக்காக பலரை சந்திக்கச் சென்ற போது ஒரு விடயம் காதில் விழுந்தது. "ஏற்றுமதி செய்யப்படும் குரங்குகள் சிறுபான்மையினக் குரங்குளா அல்லது அவை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்ததா?".

*(13 பக்கத் தொடர்ச்சி)*

# ரணில் என்ற 'மாய மான்' காட்டும் 'தீர்வு' என்ற 'கானல் நீர்'!

இதனை நான் குறிப்பிடுவதானது தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷ நோக்கிய பயணத்தில் தோற்றுவிடுவர் என்பது அர்த்தமில்லை. தமது அரசியல் நோக்கிய பயணத்தை கை விட வேண்டுமென்பதும் அர்த்தமில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் மனங்களில் எரிந்து கொண்டிருக்கும் அரசியல் அபிலாஷ என்ற தீ, அதாவது விடுதலைத் தீ இலகுவில் அணைந்துவிடக் கூடியதல்ல.

ஆனால் தமிழ் மக்கள் ஏந்தியுள்ள தமிழ்த்தேசிய தீப்பந்தத்தை மேற் கூறிய சக்திகள் தத்தமது சுய நலன்களுக்காக திசையறியா திசை நோக்கி இழுத்துச் செல்கின்றன.அதுதான் உண்மை.

மொத்தத்தில் இலங்கை அரசியல் கள நிலைவரங்களையும் சர்வதேச அரசியலையும் கையாளக்கூடிய தலைமை தாயகத்திலும் பலம்பெயர் தேசங்களிலும் இணைத் தலைமைகளாக தோற்றம் பெற்றாக வேண்டும். தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வுடன்கூடிய சுயாட்சியுடன் இலங்கையில் வாழ இது வழிவகுக்கும்.

- தென்னிலங்கை கள நிலைவரம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நகர்கின்றார் என்பது வெளிப்படையான உண்மை. அதற்கேற்றாற்போல் தனக்கு எதிராக இலங்கை அரசியலில் பலமிக்க அரசியல் சக்திகள் மேலெழுந்துவிடாதவாறு காய்களை நகர்த்தி வருகின்றார்.

குறிப்பாக மீண்டும் ஒரு "அரகலய" எழுந்துவிடாதவாறு ரணில் - ராஜபக்ஷ ஆளும் அணியினர் மிகவும் கவனமாகச் செயற்படுகின்றனர்.

- நெப்பொலியன் தோன்றவில்லை. ரணிலே மீண்டு வந்துள்ளார்.

ஆனால் "அரகலய" எழுச்சிக்கு தலைமையேற்று வழிநடத்த நெப்பொலியன் போன்றதொரு தலைவனைக் காண முடியவில்லை. ரணிலே மீண்டு வந்துள்ளார் "அரகலய" எழுச்சியும் வந்த வேகத்தில் மறைந்துவிட்டது. "ஆரகலய" எழுச்சி ஏற்பட்டபோது சிங்கள ஆளும் வர்க்கம் ஆட்டம் கண்டது என்பது உண்மையே. ஆனால் ஒரு சில வாரங்களுக்குள்ளேயே சிங்கள ஆளும் வர்க்கம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டதுடன் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையை ஏற்று தம்மை இலங்கை அரசியலில் நிலைநிறுத்திக் கொண்டது.

சிங்கள ஆளும் வர்க்கத்தைக் காப்பாற்ற "அரகலயா"க்களுக்கு எதிரான மாற்று அரசியலுக்கு அரசியலில் முகவரி இழந்து நின்ற ரணில் விக்ரமசிங்கவே மேலெழுந்துள்ளார்.

- தென்னிலங்கையில் "தோற்றுவிக்கப்பட்ட அரசியல் சூறாவளி"

அரசியல் விமர்சகர்களின் கருத்துப்படி ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சஜித் அணியினருக்கும் கொள்கைரீதியில் பெரிதளவான வேறுபாடுகள் இல்லை. இரண்டு அணியினருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணில் விக்ரமசிங்க என்ற தனிமனிதன் இருக்கும்வரை அக்கட்சிக்குள் தமக்கு பிரகாசமான அரசியல் எதிர்காலம் இல்லை என்ற நிலையிலும் ஐ.தே.கவுக்கு எதிர்காலமே இல்லை என்ற நிலையிலுமே சஜித் தலைமையில் ஒருபகுதியினர் பிரிந்தனர். பிரிந்த அணியினரில் ஒரு பகுதியினர் தற்போது ரணில் விக்ரமசிங்க தலைமையில் இணைய முடிவெடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மாற்றத்தை நோக்கிய "அரகலயைத்" தோற்கடித்து சிங்கள ஆளும் வர்க்கம் ஒரு வெற்றியை இலங்கை அரசியலில் பதிவு செய்து வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

- ஊடகங்கள் மாறி நிற்கின்றன.

"அரகலவை" துதிபாடிக் கொண்டிருந்த தென்னிலங்கை ஊடகங்களில் தற்போது ரணில் விக்ரமசிங்கவுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கினால் என்ன என்ற கருத்தோட்டம் முக்கியத்துவம் பெறுவதாக உள்ளது. தென்னிலங்கை ஊடகங்களின் ஆசிரியர் தலையங்கங்களும் கட்டுரைகளும் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தும் எழுத்துக்களும் அதிகமாக ரணில் விக்ரமசிங்க சார்பாகவே இடம்பிடித்துள்ளன.

கடந்த வருடம் தொடங்கிய "அரகலைக்கு" எதிராக ரணில் - ராஜபக்ஷ அணியினர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் தொடங்கியுள்ள "பொருளாதார மீட்சி" வெற்றியை நோக்கிச் செல்கின்றது.

ஏனெனில் தென்னிலங்கை அரசியல் களத்தில் தற்போது நிற்கும் கட்சிகள் பொருளாதார மீட்சிக்கும் "அரகலய சிஸ்டம் சேன்ஜ"க்கும் மக்கள் ஆணை கோரி நிற்கின்றனர்.ஆனால் தற்போதைக்கு "பொருளாதார மீட்சியே" தேவை. பொருளாதார மீட்சிக்கு மக்கள் ஆணை தேவையில்லை என்ற பரப்புரைகள் பலமடைந்து வருகின்றன.

- தேர்தலுக்கான 10 பில்லியன்

"மக்கள் ஆணை" பெறுவதற்காக ஒதுக்கப்படும் பத்து பில்லியன் நிதியினை துன்பப்படும் குழந்தைகளுக்கு உணவளிக்க பயன்படுத்தப்படலாம். மக்கள் கருத்துக் கணிப்புகளாலும், அரசியல்வாதிகளாலும் சோர்ந்து போயுள்ளனர். ஸ்திரத்தன்மை நிலைபெறும் வரை முற்போக்கு சக்திகளுக்கிடையிலான ஒற்றுமையை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

- தொங்கு பாராளுமன்றம்

இந்த நிலையில் தேர்தல் வந்தால் தொங்கு பாராளுமன்றம் மேலும் குழப்பத்தையும் அராஜகத்தையும் உருவாக்கும் என்ற கருத்துக்களும் விதைக்கப்படுகின்றன.

அரகலய போராட்டத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள ஜே.வி.பியின் எழுச்சியை அதாவது இலங்கை அரசியலில் ஜே.வி.பி சக்திமிக்க அரசியல் சக்தியாக எழுவதை விரும்பாத போக்கினையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஜே.வி.பியிடம் பொருளாதார நோக்கோ அல்லது நாட்டுக்கான சிறந்த அரசியல் நோக்கினையோ மக்கள் முன் வைக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

இதே குற்றச்சாட்டு சஜித் அணியினர் மீதும் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- ரணில் ஆரம்பித்துள்ள அரகலயவுக்கு எதிரான பொருளாதார மீட்சி அலைக்குள் அரகலைவை ஆரம்பித்த மக்களும் பின் தள்ளப்பட்டுவிட்டனர்.
- அரகல போராட்டத்திற்குள் குளிர் காய்ந்து அரசியல் அறுவடைக்காகக் காத்திருந்த சஜித் மற்றும் ஜேவிபி அணியினரும் முடங்கிப்போய் நிற்கின்றனர்.
- ராஜபக்ஷக்களின் ஊழல்

நல்லாட்சி ஆட்சி அமைவதற்கு முன் ராஜபக்ஷக்களின் ஊழல்குறித்து ஐ.தே.க.வினரால் கூடுதலாகப் பேசப்பட்டது. ஆனால் நல்லாட்சியை அமைத்தவுடன் ஊழல் குறித்த பேச்சுக்களும் இல்லை ஊழல்களைக் கண்டறிந்ததாகவும் இல்லை. தற்போத ராஜபக்ஷ அணியினர் தமது ஊழல்களை நிரூபிக்குமாறு பகிரங்கமாக சவால்விடுகின்றனர்.

ரணில் - ராஜபக்'க்களின் நகர்வுகளை தடுத்து நிறுத்தும் மக்கள் கருத்துக் கணிப்பாக அமைய உள்ள தேர்தல்களையும் அனுமதிக்கும் நிலையில் ரணில் - ராஜபக்ஷதரப்புதரப்பு இல்லை.

நாடாளுமன்றத்திலும் பொதுவெளியிலும் எதிர்த்தரப்பினர் மேற் கொள்கின்ற பரப்புரைகளும் ரணில் - ராஜபக்ஷ அணியினரை தடுத்து நிறுத்தும் சக்திபடைத்தவைகளாக இல்லை.

அரகலய, சஜித் அணி, ஜேவிபி என மூன்றாகப் பிரிந்து நின்று போராடிக் கொண்டிருக்கின்றன. இதற்கு மாறாக ரணில் - ராஜபக்ஷ அணி-யினர் ஓரணியாக செயற்படுகின்றனர்.

மொத்தத்தில் சிங்கள ஆளும் வர்க்கம் குறிப்பாக ரணில் - ராஜபக்ஷ அணியினர் மிகவும் மூர்க்கத்தனமான அரசியல் விளையாட்டுக்களுடன் இலங்கை அரசியலில் மேலெழுந்து வருகின்றனர்.

- தமிழ் மக்கள் எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றனர்?

அரசியல் விமர்சகர்களின் கருத்துப்படி ரணில் விக்ரமசிங்கவின் இந்த நகர்வை தமிழ் மக்கள் எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றனர். பொருளாதார மீட்சிக்கு தானே "மீட்பர்" என்ற பிம்பத்தை தென்னிலங்கையில் கட்டி எழுப்பும் ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களின் "மீட்பரும்" தாமே என்ற பாணியில் காய்களை நகர்த்தி வருகின்றார்.

தற்போது தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாகத் தோற்றுவிக்கப்படுகின்ற பிரச்சனைகள் ரணில் விக்ரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தலை நோக்கிய நகர்வினை பலப்படுத்துவதற்கான யுக்தியாகவே உள்ளது என்பதே அரசியல் விமர்சகர்களின் கருத்தாக இருக்கின்றது.

காணி அபகரிப்பு, கோவில் இடிப்பு, தொல்லியல் திணைக்களத்தின் தமிழர் பிரதேசங்களில் பௌத்த எச்சங்களை தேடும் வேட்டை, சிங்களத் தரப்பின் நீதிமன்ற மீறல், சிங்களக் குடியேற்றம் என தொடரும் நிகழ்வுகள் தமிழ் மக்களைப் பதற்றத்திற்குள் தள்ளி தீர்வினைத்தரும் மீட்பராக ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்கள் முன்வந்து நிற்கப் போகின்றார்.

- ரணில் என்ற "மாய மான்" காட்டும் "தீர்வு" என்ற கானல் நீர்!

அந்தவகையில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் "மீட்பராக அவதாரம்" எடுத்து ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வாக்கு வேட்டைஆடப் போகின்றார்.

75வது சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்குள் தமிழர் விவகாரத்திற்கு தீர்வு என தமிழ் மக்களின் காதுகளில் பூ சுற்றிய ரணில் விக்ரமசிங்க 13ஐ கொடுப்பதாகக் கூறி அதற்கெதிராக பௌத்த பிக்குகளை தென்னிலங்கையில் களம் இறக்கி பிறகு 13 பற்றி போசாதுவிட்டார். ஆனால் அடிக்கடி இன விவகாரத்துக்கான திர்வுகுறித்து பேசுவதை நிறுத்தவில்லை. பொருளாதார மீட்சியும் இன விவகாரத்துக்கான தீர்வும் சமாந்தரமாக நடைபெற வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்க அடிக்கடி குறிப்பிடுகின்றார்.

இதுதான் யதார்த்தம். இத்தகைய யதார்த்த வார்த்தைககளையம் வாக்குறுதிகளையும் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் சிங்களத் தலைமைகளிடம் இருந்து நிறையவே கேட்டிருக்கின்றனர். ஏமாந்தும் போயுள்ளனர் என்பது வரலாறு.

பொருளாதார மீட்சிக்கான வரைபடத்தை ஹவாட் பல்கலைக் கழக சமூகத்துக்கான உரையில் ரணில் விக்ரமசிங்க மிகத் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளார். அதனை அடைந்து கொள்வதில் ரணில் விக்ரமசிங்க வெற்றி பெறக் கூடும். ஆனால் அந்த வரைபடத்தில் இன விவகாரத்துக்கான தீர்வு இடம்பெறவில்லை.

ஆனால் தனது வெற்றிக்கு தமிழ் மக்களின் வாக்குகள் தேவை என்பதில் ரணில் விக்ரமசிங்க குறியாகவும் தெளிவாகவும் இருக்கின்றார்.

தமிழ்த் தலைமைகளும் சஜித் அணியில் உள்ள சிறுபான்மைக் கட்சிகளும் மனம்மாறி ரணில் அணியில் இணைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

- வாக்குச் சீட்டுக்கள் மக்களின் கைகளில்.

ஆனால் தமிழ் மக்கள் எத்தகைய முடிவினை மேற் கொள்ளப் போகின்றனர். எந்தத் தேர்தல் என்றாலும் வாக்குச் சீட்டுக்கள் மக்களின் கைகளிலேயே உள்ளன.

ரணில் விக்கிரமசிங்க பேசுகின்ற இன விவகாரத்துக்கான தீர்வு என்பது தேர்தலுடன் காற்றோடு காற்றாகக் கலைந்து போய்விடும். எனவே தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தல்குறித்து தென்னிலங்கையின் மாற்று அணியினருடன் அரசியல் பேரத்தில் இறங்கினால் என்ன? குறிப்பாக சிவில் சமூகங்கள் பல்கலைக் கழக சமூகம் என்பன முக்கிய பாத்திரத்தை ஏற்று களத்தில் இறங்க வேண்டும்.

தமிழ்த் தலைமைகள் பல சந்தர்ப்பங்களை தவறவிட்டுள்ளன. இன்றைய சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் அவர்களுடன் இணைந்த சிவில் சமூகங்கள் பல்கலைக் கழக சமூகங்கள் என்பன தவறவிடக் கூடாது.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் 2024 ஆம் ஆண்டிலேயே நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இடைப்பட்ட இந்த காலத்தில் அரசியல் சூழ்நிலை ரணில் விக்ரமசிங்கவுக்கு சாதகமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு ஜனாதிபதிக்கு இருக்கலாம்.

ஆனால் ராஜபக்ஷதரப்பின் அரசியல் இருப்புக்கு ரணில் விக்ரமசிங்கவின் நகர்வு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதிலும் அவர்கள் கவனம் செலுத்துவர். அந்தவகையில் ரணில் - ராஜபக்ஷதரப்பின் "தேனிலவு அரசியலின்" எதிர்காலம் தடம் மாறலாம்.. அதே வேளையில் ரணில் - ராஜபக்ஷ அணியினார் ஒன்றிணைந்து பொதுத் தேர்தலில் களம் இறங்குவார்களா என்பதும் கேள்விக்குறிய விடயமாகும்.

எது எப்படி இருந்தபோதும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமாயின் அதனை எதிர் கொள்ளும் வியூகங்களை வகுத்துக் கொள்வது தமிழ் மக்களின் கடைமையாகும்.

Email : vathevaraj@gmail.com

12 April 2023

# மக்கள் அரைப் பட்டினி கிடக்கிறார்கள் ஆனால் ஆளுவோர் ஆடம்பரத்தில் மிதக்குகிறார்கள்!

- கனடா நக்கீரன்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பாத்திரம் அறிந்து பிச்சை இடு என்பது தமிழில் வழங்கும் ஒரு பழமொழி. யாருக்கு என்ன கொடுக்க வேண்டுமோ அதைத் தான் கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் தானம் தருமம் செய்யக் கூடாது. உழைக்கிற பணத்தை குடித்து வெறித்து ஊதாரித்தனமாச் செலவழிக்கும் ஒருவனுக்கு உதவி செய்யக் கூடாது. ஆனால் அனைத்துலக நாணய நிதியம் தகுதி பார்க்காது இலங்கைக்குக் கடன் கொடுத்திருக்கிறது. இந்த நி-றுவனம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளது.

(1) ஊழலை ஒழிக்க ஊழல் தடுப்புச் சட்டம் கொண்டுவர வேண்டும். (2) அரசின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். (3) அதிக வருமானம் ஈட்டுவோருக்கு வரிவிதிப்பு. (4) 2025 இல் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம். (5) 2023 இறுதிக்குள் பணவீக்கத்தை 12% முதல் 18% வரை குறைத்தல். (6) 2023 யூன் மாதத்தில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகளை நீக்குதல். (7) அதிக மாற்று விகித நெகிழ்வுத்தன்மை பராமரிக்கப்பட வேண்டும். (8) மத்திய வங்கி மேலும் சுதந்தித்தோடு இயங்க வேண்டும். (9) வலுவான சமூக பாதுககாப்புக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப் பட வேண்டும்.

இந்த நிபந்தனைகளுக்கு இலங்கை அரசு இணக்கம் தெரிவித்த காரணத்தால் பன்னாட்டு நாணய நிதியம் 48 மாதங்களில் இலங்கைக்கு டொலர் 2.286 பில்லியன் (ஒரு பில்லியன் 100 கோடி) நிதியை வழங்க முன்வந்துள்ளது. முதற்கட்டமாக டொலர் 330 மில்லியனை கடந்த மாதம் வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் விதித்த நிபந்தனைகளில் நாட்டின் அரசியல் உறுதிப்பாடு உறுதி செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனை இருக்கவில்லை. சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், இராசாங்க அமைச்சர்கள், நா.உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவு மற்றும் பலன்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படவில்லை. வரவு - செலவு திட்டத்தில் பல பில்லியனை விழுங்கும் பாதுகாப்புப் படையின் எண்ணிக்கை குறைக்கப் பட வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படவில்லை.

அதே நேரம் வருகிற யூன் மாதம் தொடக்கம் இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என பன்னாட்டு நாணய நிறுவனம் நிபந்தனை போட்டுள்ளது. என்ன காரணம்? இறக்குமதிக் கட்டுப்பாட்டால் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் தங்களது ஏற்றுமதிப் பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய முடியாது இருக்கிறது. அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு இலங்கையைக் கேட்டிருந்தது. அதைத்தான் பன்னாட்டு நாணய நிதியம் செய்திருக்கிறது. சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை.

இலங்கை அரசு சனாதிபதி, முன்னாள் சனாதிபதிகள், பிரதமர், அமைச்சர்கள், இராசாங்க அமைச்சர்கள், நா. உறுப்பினர்களுக் கொடுக்கும் சம்பளம், கொடுப்பனவு மற்றும் சலுகைகள் குறைக்கப்பட வில்லை. புதிதாக நியமிக்கப்பட்ட இராசாங்க அமைச்சர்களின் சம்பளம் நா.உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மட்டுமே கொடுக்கப்படும் என அரசாங்கம் சொல்வது வெறும் கண்துடைப்பு. காரணம் ஒரு இராசாங்க அமைச்சருக்கும் ஒரு நா.உறுப்பினருக்கும் கொடுக்கும் சம்பள வேறுபாடு வெறுமனே ரூபா 10,415 மட்டுமே. கடந்த காலங்களில் நாடாளுமன்றம் சனாதிபதி, அமைச்சர் பரிவாரங்களுக்குச் சம்பளத்தை அதிகரிக்காமல் கொடுப்பனவுகளை தாராளமாக அதிகரித்து வந்துள்ளது. இது ஒரு கபடமான தந்திரமான நடவடிக்கை ஆகம்.

கடந்த ஆண்டுகள் போலவே 2023 ஆம் ஆண்டிலும் முன்னாள் சனாதிபதிகளுக்காக மில்லியன் கணக்கான நிதி தொடர்ந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கைக் குடிமக்கள் ஒரு பொருளாதாரப் பேரழிவுக்கு முகம் கொடுத்து வருவதால், சந்திரிகா குமாரதுங்க, மகிந்த இராசபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய இராசபக்ச, மறைந்த இரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாச போன்றவர்களுக்கு 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை விட அரசாங்கம் குறைக்கும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. 2022 இல் ஒதுக்கப்பட்டதை விட 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் அதிகரித்துள்ளன.

**சந்திரிகா குமாரதுங்க**

2022 ஆம் ஆண்டுக்கு சந்திரிகா குமாரதுங்காவிற்கு ஓய்வூதியப் பலன்களாக ஒதுக்கப்பட்ட அதே ரூபா 1.17 மில்லியன் (11.7 இலட்சம்) 2023 இலும் திறைச்சேரி ஒதுக்கீடு செய்துள்ளது. "மற்றவை" என்ற தலைப்பின் கீழ், குமாரதுங்கவிற்கு மேலும் ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2022 க்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் மற்றும் 2021 க்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1.4 மில்லியனோடு ஒப்பிடுகையில் அதிகமாகும். மூலதன செலவினத்தின் கீழ், குமாரதுங்க "கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்" கீழ் ரூபா 1 மில்லியன் 2023 க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதே தொகைதான் 2022 க்கும் ஒதுக்கப்பட்டது.

வாகனங்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 2 மில்லியனோடு ஒப்பிடுகையில் 2023 இல் ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 5 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

**மகிந்த இராசபக்ச**

2023 ஆம் ஆண்டில் திறைசேரி மகிந்த இராசபக்சவுக்கு ஓய்வூதியப் பலன்களாக ரூபா 1.17 மில்லியனை ஒதுக்கியுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 6.8 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டிற்கு மகிந்த இராசபக்சவுக்கு மேலதி-கமாக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மூலதன செலவினத்தின் கீழ், மகிந்த இராசபக்சவுக்கு "கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்" திட்டத்தின் கீழ் 1 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2022 ஆம் ஆண்டும் இதே தொகைதான் ஒதுக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 2 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் 10 மில்லியன் ரூபா வாகனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது 5 மடங்கு அதிகரித்துள்ளது!

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 800 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கொழும்பு 7 விஜயராம வீதி இல்லத்திற்கு மகிந்த இராசபக்ச அண்மையில் இடம் பெயர்ந்தார். விஜயராம வீதி இல்லம் மேம்படுத்தப்பட்டு வந்த போது பவுத்தலோக மாவத்தை வீதியில் மகிந்த இராசபக்ச தற்காலிகமாக குடியிருந்த ஆடம்பர பங்களா தற்போது அவரது சகோதரரும் முன்னாள் சனாதிபதியுமான கோட்டாபய இராசபக்சவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவரது ஆட்சிக் காலத்தில் அவரது தவறான பொருளாதாரக் கொள்கையால் அவர் பதவியில் இருந்து வலுக்கட்டாயமாக அப்புறப் படுத்தப்பட்டார் என்பது தெரிந்ததே. அவர் சனாதிபதியாக இருந்த போது பொருளாதார நெருக்கடி மேலும் கட்டுக்கடங்காமல் அதிகரித்தது. எரிபொருள், மருந்துகள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்காக மக்கள் மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

2022 ஆம் ஆண்டில், மகிந்த இராசபக்ச பிரதமராக இருந்த போது திறைசேரி பிரதமர் அலுவலகத்திற்கு "மேலதிக நேரம் **(Overtime)** மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள்" திட்டத்தின் கீழ் 70 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. இது 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 74 மில்லியன் ரூபாவை விடச் சற்றுக் குறைவானது. "உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணச் செலவுகளுக்காக" திறைசேரி 2022 ஆம் ஆண்டில் 12 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. இது 2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட 37 மில்லியன் ரூபாவை விடக் குறைவானது. 2022 ஆம் ஆண்டிற்கான "பராமரிப்பு செலவினத்தின்" கீழ், 2021 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 213 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில், பிரதமரின் பராமரிப்பதற்காகத் திறைசேரியால் 229 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**மைத்திரிபால சிறிசேனா**

மைத்திரிபால சிறிசேனவுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதிய பலன்களுக்காக 1.17 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. "மற்றவை" தலைப்பில் 2023 ஆம் ஆண்டிற்கு மேலும் 11 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 7.9 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2023 ஒதுக்கீடு அதி-கமானது. மூலதன செலவினத்தின் கீழ், சிறிசேனவுக்கு "கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்" கீழ் 1 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான தொகையும் அதுவே. வாகனங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 2 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**கோட்டாபய இராசபக்ச**

2023 ஆம் ஆண்டுக்கு திறைச்சேரி கோட்டாபய இராசபக்சவிற்கு ஓய்வூதிய பலன்களாக 1.17 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. "மற்றவை" என்ற தலைப்பின் கீழ், 2023 ஆம் ஆண்டில் மேலும் ரூபா 10 மில்லியன் கோட்டாபயவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மூலதனச் செலவினத்தின் கீழ், "கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்" என்பதன் கீழ் கோட்டாபயவுக்கு ரூபா1 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 2023 இல் வாகனங்களுக்காக ரூபா 2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஹேமா பிரேமதாச**

இரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாசவுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதிய பலன்களாக திறைசேரி 780,000 ரூபாவை ஒதுக்கியுள்ளது. இது 2022 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட அதே தொகையாகும். "மற்றவை" என்ற தலைப்பின் கீழ், ஹேமாவுக்கு மேலும் 1.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2022 க்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1.3 மில்லியன் மற்றும் 2021 க்கு ஒதுக்கப்பட்ட ரூபா 770,000 இரண்டோடும் ஒப்பிடுகையில் அதிகமாகும். 2023 இல் வாகனங்களுக்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 08, 2021 இல் சனாதிபதி அலுவலகத்தில் அதிகாரிகள் 778, பிரதமர் அலுவலகத்தில் 289, நாடாளுமன்றத்தில் 935, இலஞ்சம் அல்லது ஊழல் ஆணையத்தில் 442, தேர்தல் ஆணையத்தில் 710, கணக்காய்வாளர் திணைக்களத்தில் 1,769 பணியில் இருந்தார்கள். எல்லாத் திணைக்களங்கள் மற்றும் ஆணையங்களைச் சேர்த்து மொத்தம் 5,955 பேர் பணியில் இருந்தார்கள்.

2021 ஆம் ஆண்டில் ரூபா 1,610,287 இல் இருந்து 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,727,261.20 மில்லியனாக இலங்கையின் அரசாங்க செலவுகள் அதிகரித்தது. இலங்கையின் பணவீக்கம் மார்ச் 2023 இல் 50.3% காணப்பட்டது. உணவு விலைகள் 48.8% இருந்து 51.7% ஆக அதிகரித்தது. வங்கி வட்டி 15.5% ஆக இருக்கிறது. 2023 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி **(GDP)** - 3.01%. 2022 இல் - 8.7 %.

கடந்த பத்து ஆண்டுகளில் 450 அரச நிறுவனங்கள் நட்டத்திலேயே இயங்கி வந்துள்ளன. மேலும் 2012 ஆம் ஆண்டில் 183 பில்லியன் 2013 ஆம் ஆண்டு 186 பில்லியன், 2014 ஆம் ஆண்டு 186 பில்லியன் என நட்டம் ஏற்பட்டுள்ளதுடன் 2015 ஆம் ஆண்டு 271 பில்லியன், 216 ஆம் ஆண்டு 180 பில்லியன், 2017 ஆம் ஆண்டு 260 பில்லியன், 2018 ஆம் ஆண்டு 265 பில்லியன், 2019 ஆம் ஆண்டு 268 பில்லியன் என இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கியுள்ளன. அந்த வகையில் 2020 ஆம் ஆண்டு 436 பில்லியன், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டில் முறையே 337 பில்லியன் மற்றும் 322 பில்லியன் என இந்த நிறுவனங்கள் மூலம் நட்டம் ஏற்பட்டுள்ளது. நட்டத்தில் ஓடிய நிறுவனங்களின் அதி-காரிகள், ஊழியர்கள் வெகுமதியைப் **(bonus)** பெற்றுக் கொள்ளத் தவறவில்லை!

அரசாங்கத்தின் சம்பளக் கொடுப்பனவில் கிட்டத்தட்ட பாதியை முப்படையினரும் காவல்துறையும் விழுங்கிவிடுகின்றன. 2023 இல் முப்படைக்கும் ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 694,910 மில்லியன் ஆகும். முப்படையின் எண்ணிக்கை 278,000 (1919) ஆகும். கீழ்க்கண்ட அட்டவணை 3 பாதுகாப்பு மற்றும் காவல்துறை தொடர்பான செலவு 49% ஆகும்.

இலங்கையின் மக்கள் தொகை 2.2 கோடிதான். ஆனால் அது பென்னாம் பெரிய இராணுவத்தை வைத்திருக்கிறது. எந்த நாட்டோடு சண்டை பிடிக்க எனத் தெரியவில்லை. ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டால் 145 நாடுகளில் 71 ஆவது இடத்தில் இருக்கிறது! இலங்கை ஒட்டாண்டி நாடாகப் போவதற்கு முக்கிய காரணி இராணுவம் மற்றும் கடற்படை, வான்படைகளே!

இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு தொட்டு அதன் கருவூலத்தை அரசியல் வேறுபாடின்றி, கட்சி வேறுபாடின்றி எல்லோருமே கொள்ளையடித்து வருகிறார்கள். ஆற்றிலே போகிற தண்ணீரை அண்ணை குடி, தம்பி குடி என்ற கதைதான்! *(முற்றும்)*



# தமிழகத்தில் பரவும் புதிய வகை தொற்றால் ஆபத்து இல்லை; பாதிப்பு உயர்ந்தால் முகக் கவசம் கட்டாயமாக்கப்படும்: பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



தமிழகத்தில் பரவும் ஒமைக்ரானின் புதிய வகை தொற்றால் பெரிய அளவில் பாதிப்பு இல்லை. தினசரி பாதிப்பு அதிகரிக்கும் பட்சத்தில் பொது இடங்களில் முகக் கவசம் கட்டாயம் ஆக்கப்படும் என்று சட்டப்பேரவையில் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.கரோனா பரவல் தொடர்பாக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி நேற்று சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார். அவர் பேசியபோது, ''நாடு முழுவதும் கரோனா தொற்று அதிக அளவில் பரவுகிறது.

தமிழகத்தில் தினசரி பாதிப்பு 400ஐ நெருங்கியுள்ளது.நேற்று 2 பேர் உயிரிழந்துள்ளனர். அண்டை மாநிலமான கேரளாவிலும் வைரஸ் பரவல் அதிகம் உள்ளதாக தகவல் வருகிறது. தமிழகம் முழுவதும் காய்ச்சல் முகாம் நடத்துவதுடன், வீடு வீடாக சென்று ஆய்வு செய்ய வேண்டும். முகக் கவசம் அணிவது குறித்த அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார். செல்வப் பெருந்தகை (காங்கிரஸ்) பேசும்போது, ''தமிழகத்தில்திமுக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, கரோனா 2வது அலையை சிறப்பாக கையாண்டது. உருமாறிய கரோனா பாதிப்பு தற்போது அதிகரிக்கிறது. பரவலை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

பிறகு, ஜி.கே.மணி (பாமக), எஸ்.எஸ்.பாலாஜி (விசிக), நாகை மாலி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), டி.ராமச்சந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட்), ஈ.ஆர். ஈஸ்வரன் (கொமதேக), வேல்முருகன் (தவாக) ஆகியோரும் பரவலைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.இதற்கு பதில் அளித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது: தற்போது கரோனா பாதிப்பு தேசிய அளவில் 5,878, தமிழகத்தில் 386 என உயர்ந்துள்ளது. கரோனாபாதிப்பு அதிகரிக்க தொடங்கியதும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையை துரிதப்படுத்த முதல்வர் உத்தரவிட்டார்.

மருத்துவமனையில் தொற்றுஎளிதாக பரவும் என்பதால், அனைத்து மருத்துவமனைகளிலும் தற்போது முகக் கவசம் கட்டாயம்ஆக்கப்பட்டுள்ளது. பாதிப்பு எண்ணிக்கை 500 அல்லது 1,000 என்றுவந்தால், பொது இடங்கள், சமூக,சமுதாய, அரசியல் நிகழ்வுகளில்முகக் கவசத்தை கட்டாயமாக்கலாம் என்று முதல்வர் கூறியுள்ளார். தமிழகத்தில் ஒமைக்ரானின் புதிய வகை மற்றும் பிஏ2 வகைவைரஸ்கள் பரவுகின்றன. இது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் பாதிப்பாக இல்லை. தொண்டை வலி,காய்ச்சல், உடல் வலி என்ற அளவிலேயே உள்ளது. மருத்துவமனையில் யாருக்கும் ஆக்சிஜன் தேவை என்ற நிலை ஏற்படவில்லை.

தேவை ஏற்பட்டால் 24 மணி நேரத்துக்குள் 1.48 லட்சம் படுக்கைகளை பயன்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தினசரி 3 லட்சம் பேருக்கு ஆர்டிபிசிஆர் பரிசோதனை செய்யும் வகையில் 342 இடங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 55 ஆயிரம் பேர் கரோனா நிதியுதவி பெற்றுள்ளனர். கரோனா எந்த உருமாறி வந்தாலும் தமிழர்களை முதல்வர் காப்பார். அதற்குரிய கட்டமைப்புகள் தயாராக உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# இலவச வீடு வழங்கும் திட்டத்திற்கு ரூ. 5 லட்சம் நிதி வசூலிப்பது ஏன்? சீமான் கேள்வி




நொச்சிக்குப்பம் பகுதியில் விரிவடைந்துள்ள அனைத்து மீனவ குடும்பங்களுக்கும், அனைத்து வாரிசுகளுக்கும், எவ்வித கட்டாய நிதியும் பெறப்படாமல் போதிய அளவில் வீடுகள் வழங்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''சென்னை மாநகரில் பூர்வகுடி மீனவ மக்கள் வாழும் நொச்சிக்குப்பம் பகுதியைக் கையகப்படுத்தி, அனைத்து மீனவ குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படும் என்று அறிவித்த தமிழ்நாடு அரசு, தற்போது குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மட்டுமே வீடுகள் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

தமிழ்நாடு அரசின் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நொச்சிக்குப்பம் திட்டப்பகுதி என்ற பெயரில் அங்கு வாழும் அனைத்து மீனவ குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டித்தரப்படும் என்றுகூறி, கடந்த 1972 ஆம் ஆண்டு மீனவ மக்களது நிலங்கள் அரசால் கைப்பற்றப்பட்டன. அதன்பின், நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு வீடுகளைப் புதுப்பித்து கட்டித்தருவதாகக் கூறி மீண்டும் நிலங்களைக் கையகப்படுத்திய தமிழ்நாடு அரசு, ஒரு தலைமுறையைக் கடந்து விரிவடைந்துள்ள மீனவ மக்களின் குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வீடுகளை வழங்காமல், குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே வீடுகள் வழங்க முன்வந்துள்ளது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது.

மேலும், நொச்சிக்குப்பம் பகுதி அல்லாத, பிற பகுதி மக்களுக்கும் அவ்வீடுகளை வழங்க தமிழ்நாடு அரசு முடிவெடுத்திருப்பது நொச்சிக்குப்பம் பகுதி மக்களை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. அதுமட்டுமின்றி, தங்களுக்கு உரிமையான வீட்டினை பெறுவதற்கு, வீடு ஒன்றிற்கு 5,29,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று கோரி, தமிழ்நாடு அரசின் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அம்மக்களிடமிருந்து கட்டாயப்படுத்தி வசூலிப்பதென்பது அப்பட்டமான பகற்கொள்ளையாகும்.

இந்திய ஒன்றிய அரசின் நிதி உதவியுடனும், தமிழ்நாடு அரசின் பங்களிப்புடனும் ஏழை மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கு 5 லட்ச ரூபாய் அளவிற்குக் கட்டாய நிதிப்பெறப்படுவது ஏன்? இலவச வீடு வழங்கும் திட்டம் என்று கூறிவிட்டு, லட்சக்கணக்கில் நிதி வசூலிப்பதற்குப் பெயர்தான் திமுக அரசின் 'திராவிட மாடலா'?. மேலும், ஒன்றுக்கும் மேற்பட்ட வாரிசுகளுக்கு வீடு வழங்க திமுக அரசு மறுப்பது சிறிதும் அறமற்றச்செயலாகும். இதுதான் திமுக அரசு கடைப்பிடிக்கும் சமத்துவமா? என்ற கேள்வியும் எழுகிறது. ஆகவே, நொச்சிக்குப்பம் பகுதியில் விரிவடைந்துள்ள அனைத்து மீனவ குடும்பங்களுக்கும், அனைத்து வாரிசுகளுக்கும், எவ்வித கட்டாய நிதியும் பெறப்படாமல் போதிய அளவில் வீடுகள் வழங்க வேண்டுமென்று நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழ்நாடு அரசினை வலியுறுத்துகிறேன்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் மகளுக்கு தவறான சிகிச்சை தலைமைச் செயலகம் அருகே காவலர் திடீர் தர்ணா



ஆவடி காவலர் குடியிருப்பை சேர்ந்தவர் கோதண்டராமன் (42). இவர் சென்னை, ஓட்டேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றுகிறார். இவரது மகள் பிரதிஷா (10). இவருக்கு 3 வயது இருக்கும்போது சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்டதால், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.அங்கு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பிரதிஷாவுக்கு மருத்துவர்கள் வழங்கிய மாத்திரைகளை அவரது பெற்றோர் கொடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் அவருக்கு வலது காலில் கடுமையான அரிப்பு ஏற்பட்டுள்ளது.இதையடுத்து அவர், மீண்டும் கடந்த 2021ம் ஆண்டு சிகிச்சைக்காக அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், சிறுமிக்கு ரத்தம் உறைதல் ஏற்பட்டு, வலது காலும், இடது கையும் செயலிழந்தன. கோதண்டராமன், தனது குழந்தைக்கு இந்த நிலை ஏற்படக் காரணம் என்ன என்று மருத்துவர்களிடம் கேட்டாராம்.ஆனால், யாரும் சரியான விளக்கம் அளிக்கவில்லையாம்.

இதையடுத்து அவர், மருத்துவர்களின் தவறான சிகிச்சையால்தான் தனது மகளுக்கு இந்த நிலை ஏற்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் காவல் துறையினரிடமும், சுகாதாரத் துறையினரிடமும் புகார் அளித்தார். ஆனால் அவரது மனு மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால், வேதனை அடைந்த கோதண்டராமன் தலைமைச் செயலகத்துக்கு தனது மகள் பிரதிஷாவுடன் நேற்று வந்து திடீரென ராஜாஜி சாலையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்.

போலீஸார் கோதண்டராமனிடம்சமாதான பேச்சுவார்த்தை நடத்தியதைஅடுத்து அவர் போராட்டத்தைக் கைவிட்டார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் பரிந்துரைத்த மாத்திரைகளை மட்டுமே எனது மகளுக்கு வழங்கினோம். என் மகள் 5 ஆண்டுகளாக மாத்திரைகளைச் சாப்பிட்டு வந்தார். அதனால் தற்போது எனது மகளின் வலது கால், இடது கை செயல் இழந்துவிட்டன. தவறான சிகிச்சையால்தான், என் மகள் வாழ்க்கை இப்படியாகிவிட்டது.எனவே இது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்கள் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கண்ணீர் மல்க கூறினார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1044

## சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம் முகத்துவாரம், கொழும்பு

*" சித்தமற்றுச் சிந்தையற்றுச் சீவனற்று நின்றிடம்*
*சத்தியற்றுச் சம்புவற்றுச் சாதிபேத மற்றுநல்*
*மூத்தியற்று மூலமற்று மூல மந்திரங்களும்*
*வித்தைஇத்தை ஈன்றவிதத்தில் விளைந்ததே சிவாயமே"*

ஏழையின் துயரில் இறைவனைக்கண்டு இதயம் கசிந்து, ஏழைகளையும் நல்லோரையும் ஏற்று வழிநடத்திய பெரியானைக்குட்டி சுவாமிகள் சமாதியடைந்தார். சுவாமி அவர்களின் சமாதி, கொழும்பு முகத்துவாரம் தீர்த்தக்கரையில் இந்துசமயத்திலே குறிப்பிடப்பட்டுள்ள சமாதிக்கிரியைகளுடன், அன்பர்களால் நிறைவேற்றப்பட்டது. இறுதிக்கிரியையில் அடியார்கூட்டம், செட்டிமார் கூட்டம் மற்றும் சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன் அருணாசலம் போன்றோரும் பங்குகொண்டு, தமது பக்தியை வெளிப்படுத்தினர். பெரியானைக்குட்டி சுவாமியாரின் நினைவாக, சேர்.பொன்.அருணாசலம் மற்றும் அவரது துணைவியார் திருமதி. சுவர்ணாம்பிகை ஆகியோரின் அயரா முயற்சியால், முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் சுவாமி ஆலயம் தோற்றம் பெற்றது.

இவ்வாலயத்திலே எழுந்தருளச்செய்ய இந்தியாவிலுள்ள பிரயாகையிலிருந்து, அழகிய பாணலிங்கத்தையும், நந்தி பெருமானையும் கொண்டுவந்து எழுந்தருளச் செய்து, சிறப்பானமுறையில் முதல் கும்பாபிஷேகப் பெருவிழா எடுக்கப்பட்டது. மோதரைக்கடலாகிய முகத்துவாரக் கடலோரத்தில், உமையம்பாள் சமேத நடராசப்பெருமானின் அற்புதமான ஆலயத்திலே, சித்தர்பெருமானாகிய பெரியானைக்குட்டிச் சுவாமியாரின் அருளும் வெளிப்பட்டு, மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு அருகிலேயே, முகத்துவாரம் பிள்ளையார் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது. பிள்ளையாரரின் ஆலயம், மேற்கு வாசலில் முப்பத்தியாறு அடி உயரமான கோபுரத்துடன் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக இறைவன், லிங்க வடிவிலே காட்சியளிக்கின்றார். மகாமண்டபத்தின் வலதுபுறத்தில் வல்லப கணபதியும், இடதுபுறத்திலே பாலமுருகனும், அம்பிகை சுவர்ணாம்பிகையும் எழுந்தருளியுள்ளனர். இவர்களோடு ஸ்ரீதேவி, பூதேவி சமேத பத்மநாபசுவாமி, ஸ்ரீ சாகம்பரிதேவி, நவக்கிரகங்கள், நர்த்தனவிநாயகர், தெட்சணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா,துர்க்கை அம்பாள், வைரவர், சண்டேசுவரர் ஆகிய மூர்த்தங்களும் சைவாகம முறைப்படி அமைக்கப்பட்டு, அருளோடும், அழகிய கலைநயத்தோடும் காணப்படுகின்றன.

பெரியானைக்குட்டிசுவாமிகள் சமாதியடைந்தபின்னர், பலதடவைகள் இந்த ஆலயத்தின் புனருத்தாரணத் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, மகாகும்பாபிஷேகங்கள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளன. பல கும்பாபிஷேகங்கள் நிறைவேற்றப்பட்டபோதிலும் 1913 ஆம் அண்டில் நிறைவேற்றப்பட்ட முதலாவது மகாகும்பாபிஷேகம், மிகச் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. இரண்டாவது மகாகும்பாபிஷேகம் 1926 ஆம் ஆண்டில் நடைபெற்றது. 1968 ஆம் ஆண்டு திரு.அருணாசலம் அவர்களுடைய புத்திரர் திரு. மகாதேவா அவர்களால், மூன்றாவது மகாகும்பாபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது. நீண்ட இடைவெளியின்பின்னர் 1992 ஆம் ஆண்டிலும் புனருத்தாரணப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. நாட்டின் அமைதியின்மை நீடித்தபொழுதிலும், 1997 ஆம் ஆண்டு, ஆனந்த நடராசர் நுழைவாயிற் கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது.

திருக்கோணேஸ்வரம், முன்னேசுவரம், திருக்கேதீச்சரம், நகுலேஸ்வரம் போன்று, இவ்வாலயத்திற்கும் தனிச்சிறப்பு காணப்படுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இவ்வாலயத்தின் தீர்த்தப்பெருமை, சொல்லிலடங்காத பெருமையுடையது. இவ்வாலயம் அமைந்துள்ள சங்கமதீர்த்தமாகிய முகத்துவாரம் கடலே, இப்பெருமைக்குக் காரணமாக அமைந்துள்ளது. இவ்விடம் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுதற்குரிய புண்ணிய தீர்த்தமாகவும் போற்றப்படுகின்றது.

முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில், ஆடிமாதம் நடைபெறும் பூகைள் சிறப்புடையவை. ஆடிஅமாவாசை, ஆடிப்பூரம், ஆடிப்பெருக்கு என இத்திருநாட்களில் சிறப்பான பூசைகள் இடம்பெறும். குறிப்பாக, ஆடிஅமாவாசை தினத்தன்று பக்தர்கள் இவ்விடத்திற்கு வந்து, சங்கமதீர்த்தத்தில் நீராடி, தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றி, எல்லாம் வல்ல பரம்பொருளாகிய, சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரப் பெருமானை வணங்கிச் செல்வது வழக்கம்.

தமிழ்மக்கள் பரந்து வாழும் கொழும்பில், முகத்துவாரம் பகுதியில் இவ்வாலயம் அமைந்திருப்பதால், இங்கு நடைபெறும் பூசை வழிபாடுகளிலும், விழாக்களிலும், பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பிப்பது வழக்கம். குறிப்பாக, இவ்வாலயத்திலே நடைபெறும் சிவராத்திரி விழா சிறப்புடையது. சிவராத்திரி தினத்தன்று வில்வத்தால் அர்ச்சனை நிகழ்த்தி, பஞ்சமுக அர்ச்சனை செய்து, நான்குசாமப் பூசைகளும் நடைபெறும். மறுநாட்காலை எம்பெருமான் சங்கமதீர்த்தத்தில் நீராடும் நிகழ்வு இடம்பெறும். புரட்டாதிச் சனிக்கிழமைகளில், சனி பகவானுக்கு விசேட வழிபாடுகள் இவ்வாலயத்திலே சிறப்பாக நடைபெறுவதோடு, முழுமுதற் கடவுளாகிய சிவனுக்குரிய ஏனைய சிறப்பு நாட்களும், சைவாகமமுறைப்படி நிகழ்த்தப்படும். அத்தோடு பரிவாரதேவதைகளுக்குரிய திருநாட்களும் இவ்வாலயத்தில் சைவாகம முறைப்படி கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள பல புகழ்பெற்ற ஆலயங்களின் பெருமைக்கு, அங்கு உறையும் சித்தர்களே காரணமாக அமைந்துள்ளனர். அத்தகைய சித்தர்பெருமானாகிய பெரியானைக்குட்டிச் சுவாமியாரின் அருளைக்கொண்ட அருணாசலேஸ்வரர் ஆலயம், கொழும்பு, முகத்துவாரம் பிரதேசத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- வளரும்...




தமிழீழத்தின் இசை வேந்தன்
வர்ண.ராமேஸ்வரன் நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா



தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்
கலைமாமணி
ராஜேஸ் வைத்தியா
வழங்கும்
இசைச் சங்கமம் 2023

APRIL 23, 2023 @ 6PM
CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE. EAST
SCARBOROUGH

அன்பளிப்பு
VVIP $200
VIP $100
$50

விழா சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600

மலேசிய மடல்

# மலேசியாவில் தமிழ் வாழ்வதற்கு தமிழ்ப் பள்ளிகளே முழு காரணம்

## மனித வள அமைச்சர் சிவகுமார்



நக்கீரன்





**கோ**லாலம்பூர்,

உலகில் தமிழர்கள் எத்தனையோ நாடுகளில் வாழ்ந்தாலும் அத்தனை நாடுகளிலும் தமிழும் வாழ்வதில்லை. ஆனால், மலேசியாவில் தமிழர்களுடன் தமிழும் சேர்ந்து வாழ்வதற்கு இந்த நாட்டில் உள்ள தமிழ்ப் பள்ளிகளே காரணம் என்று மனித வள அமைச்சர் வ.சிவக்குமார் கூறினார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பள்ளிகள் இருந்ததாக சொல்லப்பட்டாலும் அண்மைய வரலாற்றுத் தகவலின்படி 888 தமிழ்ப் பள்ளிகள் இருந்ததற்கான ஆதாரம் உள்ளது.

ஆனாலும் இப்பொழுது 528 தமிழ்ப் பள்ளிகள் இருப்பதாகத் தெரிகிறது. இப்படி தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்ததற்கு தனிப்பட்ட எவரையும் குறைகூற முடியாது. தோட்டப் புறங்களில் வாழ்ந்த மக்கள், நகர்ப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்ததால், மாணவர்கள் இல்லாத நிலையில்தான் நூற்றுக் கணக்கான தமிழ்ப் பள்ளிகள் மூடப்பட்டன.



ஒருசில பள்ளிகள் ஒருசில மாணவர்களுடன் இன்னமும் செயல்படுவதைக் காண முடிகிறது. தோட்டப் பகுதிகளில் உள்ள தமிழ்ப் பள்ளிகள் மாணவர் பற்றாக்குறை காரணமாக மூடப்படக் கூடாதென்ற அக்கறையில் ஒருசில இடங்களில் நகர்ப் பகுதியில் உள்ள பிள்ளைகளை வாகனங்களின்மூலம் அழைத்துச் சென்று அத்தகையப் பள்ளிகளில் சேர்த்து மாணவர் எண்ணிக்கையை உயர்த்திக் காட்டி ஒருசில பள்ளிகள் காப்பாற்றப் படுகின்றன.

அப்படிப்பட்ட பணியை மேற்கொள்பவர்களுக்கு சமுதாயம் நன்றி பாராட்ட வேண்டும். அதேவேளை, காலமெல்லாம் இப்படியே செயல்பட முடியாது.

மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ள பள்ளிகளை நகர்ப் பகுதிகளுக்கு மாற்றி, அப்படி காப்பாற்றுவதுதான் ஒரேவழி என்று சிவகுமார் பினாங்கு கவிஞர் செ. குணாளனின் அந்தாதிப் பறவைகள் நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு நூல் அறிமுகம் செய்யும் முன், தலைமையுரை ஆற்றியபோது பேசினார்.

வரும் ஆகஸ்ட் மாதத்தில் தமிழ் எழுத்தாளர்களுக்காக இலக்கியப் பட்டறை நடத்த இருப்பதாகவும் அதில் கலந்து கொள்ளும் எழுத்தாளர்களில் 10 பேர், தங்களின் நூலை வெளியிட ஆதரவு அளிக்க இருப்பதாகவும் அமைச்சர் அறிவித்தார்.

எழுத்தாளர்கள், நூலை இயற்றி, அவற்றை வெளியீடு செய்யும்பொழுது ஏற்படும் பலகட்ட சிரமங்களை தான் அனுபவப்பூர்வமாக அறிவேன் என்றும் தான் ஒரு நூலை வெளியிட்டபோது அந்த அனுபவம் கிடைத்ததாகவும் சிவகுமார் தெரிவித்தார்.

நிறைவாக, அந்தாதிப் பறவைகள் நூலை அறிமுகம் செய்யும்முன், நூலாசிரியர் செ. குணாளன் உரை நிகழ்த்தினார்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24


# சத்குரு ஸ்ரீ சரவண பாபாவின் கனடா வருகை
SADHGURU SRI SHARAVANA BABA IN CANADA



குன்றுதோறும் குடியிருக்கும் கலியுக வரதனாம் முருகப் பெருமானின் திரு வடிவமான ஸ்ரீ சரவண பாபா சுவாமி உலகளாவிய தனது ஆன்மீக பயணத்தின் ஒரு பகுதியாக தனது பக்தர்களை சந்திக்க மீண்டும் கனடா வருகை தரவுள்ளார்.

பின்வரும் அட்டவணையில் உள்ளபடி சத்குரு ஸ்ரீ சரவண பாபா தனது அடியார்களுக்கு தரிசனமும் ஆசியும் வழங்கவுள்ளார். அனைத்து அடியார்களையும் இந்த பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*As part Of His mission to meet his global devotees, Sadhguru Sri Sharavana Baba is coming to Canada*
*We cordially invite all devotees to the public events outlined below.*

PUBLIC PROGRAMME

**PROGRAMME 1**

DATE: APRIL 9TH 2023 (SUNDAY) - 4:30PM
VENUE:CANADA KANTHASAMY TEMPLE
733 BIRCHMOUNT RD, SCARBOROUGH, ON M1K 1R5

SPECIAL PROGRAMME

**PROGRAMME 2**

**VISHU FESTIVAL CELEBRATION**

DATE: APRIL 15TH 2023 (SATURDAY) - 4:30PM
VENUE:BHAVANI SHANKAR MANDIR
90 NEXUS AVE, BRAMPTON, ON, L6P 3R6



BE PART OF OUR SACRED CANADA MISSION
SRI SHARAVANA BABA COMMUNITY CENTRE
SRI GNANA JYOTHI VELAYUTHA SWAMY

YouTube WATCH LIVE @: YOUTUBE.COM/@CANADAOSB

மேலதிக தொடர்புகளுக்கு – *For further details:*
Telephone: (289) 900 2505
Website: www.omsharavanabhavamatham.ca
Facebook: www.facebook.com/canadaosb

ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளை – கனடா
*Om Sharavanabhava Seva Foundation of Canada (289) 900 2505*

# MONEY PROBLEMS?

## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York





# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

# NEW LIFE FRESH START

## வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

## Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி - 687

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**
**தாவீது ராஜாவின் ஜெபம்**

கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தைக் கவனியும். நான் உம்மிடத்தில் விண்ணப்பம் பண்ணுவேன், என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும். கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர், காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன். - **சங்கீதம்** 5: 1-3

நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன், கர்த்தர் என்னை இரட்சிப்பார். அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன், அவர் என் சத்தத்தைக் கேட்பார். திரளான கூட்டமாய்க் கூடி என்னோடு எதிர்த்தார்கள், அவரோ எனக்கு நேரிட்ட போரை நீக்கி, என் ஆத்துமாவைச் சமாதானத்துடன் மீட்டுவிட்டார். - **சங்கீதம்** 55: 16-18

நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லு வேன். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார், அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய், அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்குவரும் பலனைக் காண்பாய். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள். சிங்கத் தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய். - **சங்கீதம்** 91: 2-13

நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்க லாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். - **சங்கீதம்** 34: 4-6

நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட் சிக்கிறார். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார், அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை. - **சங்கீதம்** 34: 17-20

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமா யிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார். - **சங்கீதம்** 145: 18-19

தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள், அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன். அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார். என் இருதயத்தில் அக்கி ரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத் தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக் காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. - **சங்கீதம்** 66: 16-20

தாவீது ராஜாவுடைய ஜெப வாழ்க்கையும் அதன்மூலம் அவன் பெற்ற அனுகூலங்களையும், ஆசீர்வாதங்களையும் கற்று அறிந்து எமது ஜெப வாழ்க்கையை சரிவர அமைத்துக் கொள்வோமாகில் அதன் பிரதிபலன்களை நாமும் பெற்றுக் கொள்ளலாம்.

**தேவ வாக்குத்தத்தம்**

எம்மைப் படைத்த தேவன் எமக்காக பல வாக்குத்தத்தங்களைத் தந்திருப்பதை பரிசுத்த வேதாகமத்தில் பல பகுதி களிலிருந்து வாசித்து அறியலாம். அவற்றை நாம் விசுவாசித்து, அவை நமக்காகவே எழுதப்பட்டிருப்பதைப் புரிந்து, அவற்றை எமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு உரிமையோடு ஜெபத்தில் வேண்டுதல் செய்வோமாகில் வாக்குமாறாத தேவன் வாக்குத்தத்த வசன அடிப்படையில் பதில் தருவது எவ்வளவு நிச்சயம். அப்படியான சில வாக்குத்தத்த வசனங்கள் சிலவற்றை கவனிபபோம்:

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். - **எரேமியா** 33: 3

அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார் களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். - **மத்தேயு** 18: 19-20

**தொடரும்...**

## மறுமுறை வந்திடுவாய் (கட்டளைக் கலித்துறை)

---------------------------

சித்திரை வந்தாலே தோன்றிடுமே இன்பமும் தன்னாலே!
புத்தரைப் பூசிக்கும் பௌத்தர்க்கும் புண்ணியப் பண்டிகையே!
புத்துடை பூண்டு புதுப்பொலிவும் பூரிப்பும் பெற்றோமே!
மத்தகம் வாங்கியே மாதாக்கள் இன்பமுற வைத்தோமே!

மருத்துநீர் மொண்டே மகிழ்வுடன் மஞ்சன மாடியுமே!
மருதடி மூலவரின் முன்னால் மனதினால் மன்றாடி
கருத்துடன் கண்ணியம் காருணியம் காதலும் கைக்கொண்டே!
பருப்புடன் பாகுபோல் பண்பாய்ப் பயணிப்போம் பாரினிலே!

முற்றம் பெருக்கியே! முத்துமுத்தாய்க் கோலமு மிட்டோமே!
பற்றுடன் பால்விட்டுப் பொங்கலைப் பக்தியாய்ப் பொங்கினோமே!
சுற்றமும் சூழ்ந்திடவே சொந்தங்கள் சேர்ந்தே சுவைத்தோமே!
பெற்றோர் பெரியவர் பண்பொடு சேர்ந்தே பழகினரே!


வாட்டிடும் வெய்யோனும் வந்துமே எம்மை வருத்தினாலும்
போட்டிகள் வைத்துமே பெரிதாகப் பேரமும் பேசினோம்
நாட்டியம் ஆடியும் நற்கவி பாடியும் நண்ணினோமே
பாட்டிகள் மெச்சிடப் பட்டளித்துப் பாராட்டுப் பெற்றோமே!

வறுமை வறண்டிட விக்கினம் நீங்கிட வாழ்த்தியுமே
சிறுமை சிதைந்துமே தாரணி சீர்பெற்றுத் தங்கிடவே!
கறுப்புகள் நீக்கியே கச்சிதம் கம்பீரம் காத்திடவே!
மறுமுறை வந்திடு மக்கள் மனது மலர்ந்திடவே!

01. மத்தகம் ... தலையணி 02. மொண்டு ... எடுத்து
03. மஞ்சனமாடி ... நீராடி 04. நண்ணினோம் ... சேர்ந்தோம்
05. விக்கினம் ... துன்பம் 06. தாரணி ... பூமி
07. கறுப்புகள் ... குற்றங்கள்.

---------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453




# இவ்வார ராசிபலன்

## 14-04-2023 வெள்ளி தொடக்கம் 20-04-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** மங்கையர் சிலருக்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். பணியில் கவனம் தேவை. கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப்பலம் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. சுபக்காரியம் கைக்கூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். வறுமைகள் அகலும். வெளியூர் பயணம் உண்டு. தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நண்பர்களால் நன்மையுண்டு. விரக்திகள் மறையும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். முத்தான வாய்ப்பு பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கல்வியில் கவனம் தேவை. கடன் வசூலாகும். புத்தி சாதுர்யம் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,6,5
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L




**ரிஷபம்:** மனக்கவலைகள் விலகும் வாரம். பாதகமான சூழ்நிலைகள் அகலும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் சீராகும். சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பதவி உயர்வு கிட்டும். வேண்டாத விஷயங்கள் விலகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழில் அபிவிருத்தி அடையும். வாயில் தேடி வரன் வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நலத்தில் அக்கறை தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். திருப்தி பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். பெண்களின் ஆலோசனை பயன் தரும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பயன் தரும். வருமானம் திருப்தி தரும். காதலர்கள் தம்பதியாவார்கள். தொலைதூரப் பயணம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 5,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z




**மிதுனம்:** கண்ணியமும், புண்ணியமும் சேரும் வாரம். மனோ பயம் அகலும். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் உண்டாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். வஸ்திர தானம் செய்வதால் வளங்கள் சேரும். தகுதிகள் மிகுதியாகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டாகும். வீண் வம்புகள் ஒழியும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். பயணம் வெற்றி தரும். ஆபரணச்சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். வாழ்வில் வசந்தம் கூடும். கனவுகள் பலிதமாகும். குடும்ப கௌரவம் உயரும். பேச்சில் நிதானம் தேவை. வளமான சிந்தனை உதயமாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கையுண்டு. பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். குடும்பத்தில் பல வகைகளில் நன்மை ஏற்படும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெருமிதம் நிறைந்த காலம். இடையூறுகள் அகலும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**கடகம்:** சினத்தைத் தவிர்க்க வேண்டிய வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். போட்டி பொறாமைகள் விலகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். வயிற்று சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மகிழ்ச்சியான செய்தி வரும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உற்சாகம் களைகட்டும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். சகோதர உதவி கிட்டும். இலக்கிய ஆர்வம் கூடும். முயற்சிகள் வெற்றி தரும். தாய், தந்தை உதவி உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலை அமையும். திருமகள் கிருபை உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பண-ியில் கண்டிப்பு அவசியம். வழக்குகள் முடிவுக்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். நலம் காணும் வாரம். திடீர் திருப்பம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Q



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**சிம்மம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். ஆடை அணிகலன் சேரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. உடல்நிலையில் கவனம் தேவை. எண்ணங்கள் மாறுபடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். விருப்பமான தொழில் அமையும். கடன் சுமை குறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கன்னிப்பெண்களிடம் செயல்களில் துணிவு கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். குடும்ப கௌரவம் உயரும். ஆலோசனை பலன் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மை தரும். விருந்தினர் வருகை உற்சாகம் தரும். வீடு தேடி வெற்றி வரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். துணிவோடு செயல்படுவீர்கள். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். பிரச்சனை முடிவுக்கு வரும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வீடு மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். மெத்தனப் போக்கு விலகும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,S




**கன்னி:** பெண்களால் ஆதாயம் வரும் வாரம். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகமான சூழ்நிலை விலகும். கல்வியில் ஆர்வம் கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மை உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பாராட்டுக்கள் குவியும். வெளியூர் பயணம் வெற்றி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்புக் கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு குறையும். ஆபரணச் செலவுகள் கூடும். யோகமான காலமாக அமையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் மேன்மை உண்டு. காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். வாயில் தேடி வாய்ப்பு வரும். காரியங்கள் கைகூடும். வங்கிச்சேமிப்பு உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 9,5,3,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J




**துலாம்:** பயணத்தால் அனுகூலம் தரும் வாரம். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்புதும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். தொழில் போட்டி மறையும். உறவினரால் உதவிகள் கிட்டும். ஆபத்துக்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப் பயணம் உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். தர்மச் சிந்தனை மேலோங்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. பழைய பகை தீரும். கடன் அமையும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர் விடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். மனதில் தெம்பும் தைரியமும் கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். நினைத்தது நடக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G




**விருச்சிகம்:** வெற்றிச் செய்தி வரும் வாரம். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். புதுமைகள் நிறைந்த காலம். நீண்ட நாளைய நோய் விலகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். உள்ளம் மகிழும். வெளிவட்டாரப் பழக்கங்கள் அதிகமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மனிதநேயம் மிகுதியாகும். வயிற்று உபாதைகள் வந்து போகும். பெற்றோர்களால் பெருமை சேரும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். தடைகள் விலகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். உழைப்பு கடுமையாக இருக்கும். விரக்திகள் விலகும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகமாகும். காலை நேரத்தில் இனிய செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியம் சேரும். வேதனைகள் சாதனையாகும். பெண்களால் பெருமை சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,T

***(தொடர்ச்சி 30 பக்கம்)***

# இவ்வார ராசிபலன்


(29 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** தந்தை வழி உறவுகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. வியாபாரத்தில் வேகம் கூடும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளியூர் பயணம் வெற்றி தரும். சொத்துக்கள் வில்லங்கம் விலகும். கனிவான பேச்சு அவசியம். மருத்துவச் செலவு குறையும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். நூதன பொருள் சேர்க்கையுண்டு. போட்டி, பொறாமைகள் விலகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். வருமானம் திருப்தி தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிட்டும். வியாபாரம் விருத்தியாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சிந்தனை மேலோங்கும். பாகப்பிரிவினை ஏற்படும். பழைய பாக்கிகளும் வசூலாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,L




**மகரம்:** மகிழ்ச்சி செய்தி வரும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகள் உதிரியாவார்கள். தொட்டக்காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். சேமிப்பு வளரும். தொழிலாளர்ளுக்கு மனநிறைவு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். வெளியூர் பயணம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதார நிலை உயரும். வரவுகள் அதிகரிக்கும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். அயல்நாட்டு பயணம் உண்டு. ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெரியோர்களின் பாராட்டுக் கிடைக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,P




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். எதிரிகள் உதிரியாவார்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். மாற்றங்கள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்பு வரும். மனக்கசப்பு நீங்கும். பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். மங்களச் செய்திகள் வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் பெருகும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். ஆக்கப்பூர்வ எண்ணம் உதயமாகும். தொழிலாளர்களுக்கு மன நிறைவு உண்டு. கடன் பிரச்சனைகள் நீங்கும். புத்தி சாதுர்யம் பெருகும். செய்த்தொழில் லாபம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கட்டிடத் தொழிலாளர்களுக்கு லாபம் அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். உத்தியோகத்தில் நல்லபெயர் கிட்டும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**மீனம்:** பணியில் பாராட்டு கிடைக்கும் வாரம். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் குறையும். மன நிம்மதி குறையும். தன சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். ஆதாயம் பெருகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலைப்பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். செல்வாக்கு உயரும். வரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்யம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். எதிர்ப்புக்கள் தவிடுபொடியாகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பாராட்டுக்கள் கூடும். மாலை நேரத்தில் கவனம் தேவை. அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கைத் தரம் உயரும். பொன் பொருள் சேரும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் தரும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். புதிய சிந்தனை உதயமாகும். சேமிப்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலில் ரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். முயற்சியில் வளர்ச்சியடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நல்லச்செய்திகள் நாடி வரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். செல்வாக்கு உயரும். வீடு தேடி வெற்றி வரும். ஆழமான மேன்மைகள் தொடரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சந்தோஷம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P

# கடந்தவையும் கடப்பவையும் (54)

*பல காலம் பொகாத பாதையது. - மிக*
*சில காலம் ஊரை அறிந்தவர்கள்*

*முதன் முதலாய் போபவளாய் நினைத்தாரோ*
*அதன் வளைவு நெளிவுகளை விபரித்து - மிக*

*பக்குவமாய் வழிகாட்டிச் செல்கின்றார் - நான்*
*பத்து வயதில் அப்பாதவழி திரிந்தவிதம்*

*சொன்னாலும் விளங்குமா? எந்நாளும்*
*செல்போனில் விளையாடும் இவர்களுக்கு - அன்று*

*பட்டக்காலம் வந்துவிட்டால் குதூகலம் தான் - அதுவும்*
*பத்துக்களின் முற்கூற்றில் முடிந்ததுதான் எங்களுக்கும்*

*விடுமுறை நாட்களில் வீடுவரும் தந்தையுடன்*
*மகிழ்வொடு பட்டம் விடும் தாத்தா*

*தொகை தொகையாய் வண்ணக் காகிதங்கள் (பட்டத்தாள்) வாங்கிடுவார்*
*வகை வகையாய் பட்டங்கள் கட்டிடுவார்*

*அழகான கொக்குப் பட்டம் பருந்துப் பட்டம்*
*வளைந்தே ஆடும் கட்டுக்கொடி என*

*மனதைக் கவரும் அழகில் பல கட்டியபின் ஒட்டி*
*அதற்கு வேறு விண்ணும் செய்வார் - அது*

*இராமனின் வில்போல் வளைந்திருக்கும் - அதனொலி*
*ஊர்கள் பலவினை ஊடறுக்கும்*

*வெள்ளையும் சிவப்பும் சேர்ந்தாற் போல*
*கொள்ளை அழகில் கொக்குப் பட்டம் - பல*

*குஞ்சங்களோடு அழகாக அசைந்தாட - அதனோடு*
*விண்ணும் தான் கூவியாடும் காட்சியது அற்புதமே*

*அரை மைல் தூரத்தில் கடற்கரை - அங்கு*
*விரைந்து சென்று பட்டம் ஏற்றி - பின்*

*மறைவுகள் இல்லா இடம் பார்த்து*
*முறையாக நூலை விட்டபடி*

*தந்தையும் தாத்தாவும் மாறிமாறி நூல்பிடிக்க - மீதி*
*பந்தான நூலோடு மாமாவும் பின்தொடர - அவர்*

*நூல் இழக்கும் வேளைகளில் தவறவிடும் தருணமெல்லாம்*
*காலடியில் மிரிபட்டும் எடுப்பதுண்டு - அவர்*

*பாவம் என்று உதவப்போய் கடும்*
*கோபம் கொண்டு வீடுவந்து சேர்வதுண்டு - அன்று*

*பட்டம் விட்ட பெரியவர்கள் காட்டிய பாதையிது - இவ்வழியால்*
*ஒட்டி ஒட்டி பயந்தபடி கடந்த நாட்கள் பலவும் உண்டு - ஏன்?*

*(அறிவோம் தொடரும்)*

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --



## Personal Prayer to the Holy Spirit

**Our Mother or Perpetual Help**

Holy Spirit Thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift of forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everythig and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted.

R.R


SUBRA
SUBRA MORTGAGE SOLUTIONS
MORTGAGE FINANCIAL
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages
Purchase
Refinance
Renewal
Switches
Equity lind of Credit
Pre-approvals
Self-employed
Multi-rental properties
New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc….
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்…
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1410 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 14, 2023

# ஸ்காபுறோவில் ஸ்வரநய இசைக் கல்லூரியின் வருடாந்த இசை விழா சிறப்பாக நடைபெற்றது



திருமதி மனோராணி துசிதரன் அவர்களை குருவாகவும் நிறுவனராகவும் கொண்ட கனடா ஸ்வரநய இசைக் கல்லூரியின் வருடாந்த இசை விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. கடந்த 08-04-2023 சனிக்கிழமையன்று நடைபெற்ற இந்த விழாவில் சிறப்புக்குரிய அம்சமாக விழாவின் முதல் அரைப் பகுதி கர்நாடக இசை சார்ந்த பாடல்களை மாணவ மாணவிகள் பாட அவற்றிக்கு மிருதங்கம் வயலின் போன்ற பக்கவாத்தியக் கருவிகள் மெருகூட்ட மிகவும் சிறப்பாக அந்த பகுதிய நகர்ந்து சென்று சபையோரினதும் பெற்றோர்களினதும் பாராட்டுக்களைப் பெற்றது.

(உள்ளே தொடர்ச்சி 9ம் பக்கத்தில்)



# கனடா புங்குடுதீவு அன்பர்கள் கூடி அனுஸ்டித்த மறைந்த எழுத்தாளர் மு. தளையசிங்கம் அவர்கள் மறைந்த 50வது ஆண்டு நினைவு

இலங்கையின் வடபுலத்தின் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சமூக அக்கறை கொண்ட ஒரு எழுத்தாளனாக தன்னை அடையாளப்படுத்தியும் குறிப்பாக சாதீயத்திற்கு எதிராக எழுதியும் பேசியும் வாழ்ந்து மடிந்த மு. தளையசிங்கம் அவர்கள் மறைந்த 50வது ஆண்டு தினம் கனடாவில் கடந்த 09-04-2023 அன்று அனுஸ்டிக்கப்பெற்றது.

மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில். நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு அமரருக்கு தங்கள் அஞ்சலியைத் தெரிவித்தனர்.

(உள்ளே தொடர்ச்சி 9ம் பக்கத்தில்)

# திருக்குறளின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஜி. யு. போப் அவர்களுக்கான நினைவுச் சின்னம் கனடாவில் நிறுவப்படும்

திருக்குறள் நூலில் அடங்கியுள்ள அனைத்துக் குறள்களையும் வாசித்து தெளிந்து அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த கனடியரான ஜி. யு. போப் அவர்களைக் கௌரவித்து நினைவு கூரும் வகையில் கனடிய தமிழர் பேரவை முன்னெடுக்கும் நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் விரைவில் பூர்த்தியடையும் என்ற நம்பிக்கை தற்போது அனைவரிடத்திலும் பரவியுள்ளத

இந்த வகையில் தமிழ் அறிஞரான ஜி.யு.போப் அவர்களுக்கு, கனடாவின் பிறின்ஸ் எட்வேர்ட் தீவில் அமைந்துள்ள பெடெக் என்ற அவர் பிறந்த கிராமத்தில், நினைவுச்சின்னம் ஒன்றினை அமைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முயற்சிக்கு பலமும் நிதியும் சேகரிக்கும் வகையில் இசை நிகழ்ச்சி. இசை நிகழ்ச்சி ஒன்று கனடாவில் நடைபெறவுள்ளது.






# ரணில் என்ற" மாய மான்" காட்டும் "தீர்வு" என்ற "கானல் நீர்"!

**வி.தேவராஜ் (மூத்த ஊடகவியலாளர் — கொழும்பு)**

- மூர்க்கத்தனமாக மேலெழும்பும் ரணில் - ராஜபக்ச தரப்பு.
- தென்னிலங்கை சக்திகளுடன் தமிழர் தரப்பு

ஜனாதிபதி தேர்தல்குறித்து இணைந்தால் என்ன?

இலங்கையின் இன விவகாரம் திர்வு காணப்படுமா?,இலங்கை அரசாங்கம் திர்வு காணுமா?,இந்திய அரசாங்கம் தீர்வு காணுமா?,சர்வதேச சமூகம் இன விவகாரத்துக்குத் தீர்வு காணுமா?,தமிழ் மக்கள் பெரு நம்பிக்கை வைத்துள்ள ஐ.நா அதனுடன் இணைந்த மனித உரிமைப்பேரவை தீர்வு காணுமா?, தமிழ்த் தலைமைகள் தீர்வினைக் கண்டு விடுவார்களா?, புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தீர்வினைக் காண்பார்களா?

தமிழர் விவகாரத்துடன் தொடர்புடைய மேற்குறிப்பிட்ட தரப்பினர் அனைவருமே பேசுவது தமிழர் விவகாரத்துக்கான தீர்வு பற்றியதுதான். ஆனால் தீர்வுதான் இன்று வரை வந்தபாடாக இல்லை. மேலோட்டமாகப் பார்த்தால் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க இத்தனை தரப்புக்களா என மலைக்க வைக்கும்.

(உள்ளே தொடர்ச்சி 13ம் பக்கத்தில்)

# கனடா Toronto Voice Of Humanity அனுசரனையில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பில் நடைபெற்றது



கனடாவில் கடந்த பல வருடங்களாக சேவை நோக்குடன் இயங்கிவரும் **Toronto Voice Of Humanity** அமைப்பின் அனுசரனையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் உள்ள இரத்த பற்றாக்குறையை போக்கும் நோக்கொடு இரத்த தானம் வழங்கும் நிகழ்வு 08-04-2023 அன்று சனிக்கிழமை மட்டக்களப்பு ஆறுமுகத்தான் குடியிருப்பு கனிஸ்ட வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சக்தி மற்றும் காந்தி விளையாட்டு கழகங்கள் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். (தொடர்ச்சி 7ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H.Selvanayagam, Broker